


# திருக்கோயில்

பிப்ரவரி 1988 விலை ரூ. 3


எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
இராமலிங்கம்

முகப்பு: முருகப்பெருமான்
மயில்மேல் அமர்ந்த
திருக்கோலம்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை : 30 | திருவள்ளுவர் ஆண்டு 2019 பிப்ரவரி 1988 | பிரபவ ஆண்டு மாசி திங்கள் விலை ரூ. 3-00 | மணி : 2 |
|---|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு முக்கிய அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

அண்மைக்காலங்களில் தாங்கள் திருக்கோயில் இதழுக்கு வழங்கி வரும் அமோக வரவேற்பிற்கு மனம் நிறைந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறோம். உயர்ந்துவரும் தாள்விலை, அச்சகக் கட்டணம், அஞ்சல் தலைக்கட்டணம், அச்சுக்கட்டைகள் கட்டணம் ஆகியவற்றை ஈடுகட்டும் வகையில் 1988 ஜனவரி முதல் திருக்கோயில் தனி இதழ் விலையை ரூ. 2 லிருந்து ரூ. 3 ஆக உயர்த்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துத் தங்கள் ஒத்துழைப்பைத் தொடர்ந்து நல்கிட வேண்டுகிறோம்.

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை-600 034.**

என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| அரை ஆண்டு | — ரூ. | 18-00 |
| ஒரு ஆண்டு | — ரூ. | 36-00 |
| ஆயுள் | — ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.
**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

சிவராத்திரி மகிமை
—தி. இராச. கல்யாண சுந்தரம், ஐ.ஏ.எஸ்.

மூடர்தம் பிறவியோ நல்ல?
—செவ்வேள்

வள்ளுவரும் வள்ளலாரும்
—ஊரன் அடிகள்

வைத்தியநாதா மருந்து தருவாய்
—பி. பாண்டியன் ஐ.ஏ.எஸ்.

விதியையும் வெல்லலாம்
—நிறைமதி

பக்த குசேலர்
—வே. தியாகராஜன்

கந்தவேள் கருணை
— திருமுருக கிருபானந்தவாரியார்

திருத்தணிகை
—புலவர் செந்துறைமுத்து

இராமன் இச்சை
—இராமகிருஷ்ணப் பரமஹம்சர்

செப்புத்திருமேனிகள்
—நடனகாசிநாதன்

தைப்பூசம் கொண்டாடுவோம்
—அருட்செல்வி

நாம் ஒரு சிந்தனை
—ம. சூரியராஜ்

பயன்தரும் திருமுறைகள்
—நா. இராமமூர்த்தி

பாரதப் போரில் பார்த்தசாரதி
—டாக்டர் த. அமிர்தலிங்கம்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு



# சிவராத்திரி மகிமை


**தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ்.,**
**ஆணையாளர்,**
**இந்து சமய அறநிலையத் துறை.**


மாசி மாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய நாள் மகா சிவராத்திரி என்று வழங்கப்படுகிறது. வேதங்களில் சாம வேதமும், நதிகளில் கங்கையும், ஐம்பூதங்களில் ஆகாயமும், தேவர்களில் தேவேந்திரனும் சிறப்பு பெற்று விளங்குவதைப் போலவே விரதங்களில் சிறந்தது சிவராத்திரி விரதம் ஆகும்.

சிவபெருமான், திருமால் பிரமர் காணத் திருவண்ணாமலையில் பேரொளிப் பிழம்பாகத் தோன்றிய இராத்திரியே சிவராத்திரி ஆகும்.

''அரியும் யானும் முன் தேடும் அவ்
அனற்கிரி அனல
கிரி எனும்படி நின்றதால்
அவ்வொளி கிளர்ந்த
இரவதே சிவராத்திரி
ஆயினது! இறைவர்
பரவி உய்ந்தனர் அன்னதோர்
வைகலிற் பலரும்''

எனவரும் கந்தபுராணப் பாடலில் பிரமதேவர் ''திருமாலும் நானும் திருவண்ணாமலையில்தேட, சிவபெருமான் ஒளிப் பிழம்பாக நின்ற இரவே சிவராத்திரியாகும். அச்சிவ இராத்திரியில் இறைவரை அனைவரும் வழிபட்டு உய்ந்தனர்'' என்று கூறியிருப்பதைக் காண்கிறோம்.

சிவராத்திரி குறித்து மேலும் இரு வரலாறுகள் குறிக்கப்படுகின்றன. உமாதேவியார் தம் வளைக் கரத்தால் சிவபெருமானின் திருக்கண்களை மூடி மறைத்த குற்றம் தீர, ஆகம விதிப்படி சிவபிரானை நான்கு யாமங்களிலும் பூசித்து வழிபட்ட ராத்திரியே சிவராத்திரி என்றும் கூறப்படுகிறது. திருப்பாற்கடலில் ஆலாலம் என்னும் கொடிய நஞ்சு தோன்றியபோது, சிவபெருமான் அதனை உண்டு தம்மிடற்றில் அதனை அடக்கியருளிய ராத்திரியே சிவராத்திரி எனவும், அவ்விரவில் தேவர்கள் சிவபெருமானைப் போற்றி வழிபட்டதைப் போலவே மாந்தரும் வழிபட்டுய்ய வேண்டும் எனவும் கூறப்படுகிறது.

சிவராத்திரி பற்றிய வரலாறுகள் இவ்வாறு பலவாறாகக் கூறப்படினும், சிவபெருமானின் பெருமையை இந்த ராத்திரியின்போது போற்றி உறங்காது விழித்திருந்து விரதம் இருத்தல் வேண்டும் என்பது தெளிவு. ''சிவராத்திரி போது துயிலோம் என்ற விரதியர்'' என்பது தாயுமானவர் திருவாக்கு. சிவராத்திரி விரதப்பெருமையைச் சிவபெருமானே நந்திதேவருக்கு உணர்த்தியருள, அவரிடம் சூரியன், முருகன், எமன், மன்மதன், இந்திரன், அக்கினி, சந்திரன், குபேரன் முதலானோர் கடைப்பிடித்து நன்மைகள் பலவற்றைப் பெற்றுள்ளனர். இதனை

''இந்தநல் விரதந் தன்னைச் சிவன் நந்திக்கு
இசைத்திட உணர்ந்து செங்கதிரோன்
கந்தவேள், கதைக்கை காலன், விற்காமன்
கடவுளர் கண்ணோர்ஆ யிரத்தோன்
செந்தழற் கடவுள், மதி, நிதிக் குபேரன்
செப்பிய வரன்முறை நோற்றுத்
தந்தம மனத்தில் விழைந்தன பெற்றுத்
தகைபெறு தலைவர் ஆயினரால்''

என்ற பாடலால் அறிகிறோம்.

திருவாரூரை ஆண்ட முசுகுந்தன் என்ற சோழமன்னனின் வரலாற்றோடு இணைத்துச் சிவராத்திரியின் பெருமை பேசப்படுவது இங்கே அறியத்தக்க அற்புத வரலாறாகும். ஒரு வில்வ மரத்தின் அடியில் சிவபெருமான் தம் தேவியாரோடு அமர்ந்து சிவராத்திரியன்று அளாவளாவிக் கொண்டிருந்தபோது அம்மரத்தில் வாழ்ந்திருந்த குரங்கு ஒன்று தானும் தூங்காமல் அவ்விரவு முழுதும் விழித்திருந்தது. தூக்கம் வராத அக்குரங்கு வில்வ இலைகளைப் பறித்து அவற்றைச்சிவபெருமான் மேலும் உமாதேவியார் மேலும் வீசிய வண்ணம் இருந்தது. ஒரு இனம் புரியாத தெய்வீக உணர்வே அவ்வாறு செய்ய அக்குரங்கினைத் தூண்டியது எனலாம்.

சிவராத்திரியின் நான்கு யாமங்களிலும் தூங்காதிருந்த குரங்கு வீசிய வில்வ இலைகளை மகிழ்ந்து ஏற்றுக் கொண்ட சிவபெருமானும் அம்முசுக்கலையை (குரங்கு) முசுகுந்த சக்கரவர்த்தியாகப் பிறக்க திருவருள் புரிந்தருளினார். இறைவர் திருவருளால் சக்கரவர்த்தியாகும் பேறு பெற்ற அக்குரங்கும், இறைவனைச் சிவராத்திரியில் பூசித்துத்தான் பெற்ற திருவருளை உலகம் யாவும் உணர்ந்து கொள்ளும் பொருட்டு முசுகுந்தனாகத் தான் வாழும் காலத்திலும் குரங்குமுகத்துடனேயே வாழ்ந்திருக்க வேண்டும் என இறைவரைக் கேட்டுக் கொண்டது. இறைவரும் அவ்வாறே அருள் புரிய அக்குரங்கு முசுகுந்தச் சக்கரவர்த்தியாகத் தன் மறுபிறவியில் தோன்றிச் சோழர் குலத்தின் புகழ் இந்திர உலகத்திலும் பரவுமாறு சிறந்த ஆட்சியைப் புரிந்தமையை நமக்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை, கந்தபுராணம், கலிங்கத்துப்பரணி முதலான நூல்கள் காட்டுவதனால் சிவராத்திரி விரதச் சிறப்பினை நாம் தெரிந்துகொள்ளலாம். குருத்ருகன் என்ற வேடன் ஒருவன் சிவராத்திரியின் போது அவனையும் அறியாமல் இருந்த விரதமே அவனை மறுபிறவியில் குகனாகப் பிறக்க அருள் புரிந்தது என்ற ஒரு வரலாறும் சிவராத்திரி விரதத்தின் பெருமையைக் காட்டுகிறது.

இனிநாம் சிவராத்திரி விரதம் அனுட்டிக்கும் முறையைச் சுருங்க அறிந்துகொள்வோம். சிவராத்திரிக்கு முதல்நாள் ஒருவேளை மட்டுமே உண்டு மனத்தூய்மையும் உடல் தூய்மையும் பேணி அன்றிரவு துயிலவேண்டும். மறுநாள் சதுர்த்தசியாகிய சிவராத்திரி அன்று விடிகாலையிலேயே துயில்



எழுந்து நீராடவேண்டும். பிறகு திருக்கோயிலுக்குச் சென்று சிவபெருமானைத் துதித்து வழிபட்டு அன்று பகல் முழுவதும் சிவ சிந்தனையோடும் சிவத் தியானத்தோடும் தூய்மையாக இருக்கவேண்டும். வீட்டில் பூசையறையைக் கோமயத்தால் மெழுகித் தூய்மை செய்து கோலமிட்டு அழகு படுத்த வேண்டும். மாலையில் சிவாலயம் மீண்டும் சென்று தரிசனம் செய்ய வேண்டும். பிறகு சிவ ராத்திரியின் நான்கு யாமங்களிலும் அவரவர் இல்லங்களிலுள்ள பூசையறையில் சிவபெருமானை அபிசேக அலங்காரம் செய்து அர்ச்சித்து நிவேதனம் அளித்துப் பூசிக்கவேண்டும்.

சிவபெருமானுக்கு அபிசேகம் செய்யுங்கால் பால், தயிர், தேன், சர்க்கரை, இளநீர், பன்னீர், எலுமிச்சம்பழம், சந்தனம், விபூதி, பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், தேன், கருப்பஞ்சாறு ஆகியவற்றைப் பயன்படுத்தவேண்டும். சிவபெருமானின் அலங்காரத்திற்குச் சந்தனம், வில்வத்தளிர், தாமரைமலர், முல்லைமலர், குங்குமப்பூ, நந்தியா வர்த்தமலர் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

சிவபெருமானை முதல் யாமத்தின்போது தாமரை மலராலும், இரண்டாம் யாமத்தின்போது துளசி இலையாலும், மூன்றாம் யாமத்தில் வில்வத் தளிராலும் நான்காம் யாமத்தில் நீலோற்பல மலராலும் அர்ச்சனை செய்தல் வேண்டுமென ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. முதல் யாமத்தில் பயற்றம்பருப்புப் பொங்கலையும் இரண்டாம் யாமத்தில் பாயசம், மூன்றாம் யாமத்தில் எள்ளன்னம், நான்காம் யாமத்தில் சுத்தான்னம் நிவேதனம் செய்ய வேண்டும். ஒவ்வொரு யாமத்திலும் தூப தீப ஆராதனைகளைச் சிறப்புறச் செய்யவேண்டும். இவ்வாறெல்லாம் முறைப்படி செய்ய இயலாமல் போனாலும், இயன்ற அளவு செய்து சிவபெருமானை மனம், மொழி, மெய்களால் தியானித்து, இரவு முழுவதும் பூசித்து மறுநாள் காலை நீராடி பாரணை செய்து பிரசாதம் உண்ண நாமும் உய்வதோடு, நம்மூவேழு தலை முறையினரையும் உய்வித்து நலம் எய்தி வாழலாம்.

சிவபெருமான் அன்பர்தம் உள்ளத்திலும், ஆலயங்களிலும் கோயில் கொண்டிருப்பதைப் போலவே பேய் வாழும் சுடுகாடுகளையும்கூட வெறுப்பதில்லை.

''வாயே நீ வாழ்த்து கண்டாய்
'பேய்வாழும் காட்டகத்தே ஆடும்பிரான்
வாயேநீ வாழ்த்து கண்டாய்,'' [தன்னை

என்பார் திருநாவுக்கரசர். அத்தகைய சிவபிரானை வாழ்த்தி சிவராத்திரியை ஒட்டி '' மயானக் கொள்ளையும் நடத்தப்படுகிறது.

***



# மூடர்தம் பிறவியோ நல்ல ?


**செவ்வேள்**

அருஞ்சிறப்பு வாய்ந்த நம்முடைய சிவப்பிரகாச சுவாமிகள் தம்முடைய நெடுங்கழி நெடில் என்னும் நூலில் பாடியுள்ள பாடல் ஒன்றின் கவி நயத்தைக் காண்போமாக.

கண்ணப்பநாயனார் முத்தி அடைந்த ஸ்ரீ காளஹஸ்தி தலம் சிலந்தி, பாம்பு யானை ஆகிய மூன்றாலும் வழிபடப்பட்டதலம் ஆகும். காளத்தி மலையில் எழுந்தருளி யிருக்கும் குடுமித் தேவர் மேல் கதிரவனின் வெம்மையான கிரணங்கள் படுவதைக் கண்டு வருந்திய சிலந்தி, இறைவன் மேல் வெயில் விழாதவாறு தன் வாய்நூலினால் மதில் மண்டபம் கோபுரம் முதலியவற்றை அமைத்து வழிபட்டு வந்தது. சிவபெருமான், சிலந்தியின் அன்பினைக் கண்டு வியந்தார் எனினும் சிலந்தியின் பக்தியை மேலும் சோதித்திட எண்ணி தம் முன்னர் ஏற்றியிருந்த ஒரு திருவிளக்கின் சுடரை மேலெழச் செய்தார். மேலெழுந்த திருவிளக்கின் சுடர் சிலந்தி தன் வாய்நூலினால் இழைத்த கோயிலை முழுவதுமாக எரித்துவிட்டது. அதனைக் கண்டு வருந்திய சிலந்தி ''நான் பல நாட்கள் வருந்தி அமைத்த திருக்கோயில் அழிந்தது. இனி நான் வாழேன்'' எனக் கூறி திருவிளக்கின் சுடரில் தானும் விழுந்து இறக்க முற்பட்டது. அது கண்ட இறைவர் சிலந்திக்குத் திருவருள் புரிந்து தம் திருக்கரத்தால் சிலந்தியைத் தாங்கித் தம் திருவடிக்கீழ் இருக்கப் பணித்தார்.

சிலந்தியைப் போலவே ஒரு பாம்பும் திருக்காளத்திப் பெருமானை இரத்தினங்களைக் கொண்டு நாளும் பூசித்து வந்தது. திருக்காளத்தியில் வாழ்ந்திருந்த யானை ஒன்றும் தன் வாயில் பொன்முகலியாற்றின் நீரையும், தன் துதிக்கையில் வில்வத் தளிர்களையும் கொண்டு வந்து இறைவரை நீராட்டி, மலரிட்டு வணங்கிச்செல்லும். அப்படி வணங்கும்போது நாகம் இறைவர் முடி மீது வைத்து வணங்கிச் சென்ற இரத்தினங்களை வெறும் கல்லெனக் கருதி அவற்றை யானை தள்ளிவிட்டுவிடும். தான் இறைவர் முடிமீது வைத்த இரத்தினங்கள் குப்பைபோல ஒதுக்கித்தள்ளப்பட்டு கீழேகிடப்பதைக் கண்டு பாம்பு தினமும் வருந்தும். ஒரு நாள் தான் வைத்து வழிபடும் இரத்தினங்களைக் கீழே தள்ளி தன் பூஜையைச் சிறுமைப் படுத்துபவரைத் தண்டிக்க எண்ணிய பாம்பு, இறைவன் திருமுடியிலிருந்த தளிர்களுள் மறைந்திருந்தது. வழக்கம்போல் இறைவனைப் பூசிக்க வில்வத்தளிர்களுடனும் பொன் முகலியாற்று நீருடனும் வந்த யானை, தன்துதிக்கையால் முதல் நாள் தான் சூட்டியிருந்த தளிர்களைத் தள்ள முற்பட்டபோது தளிருக்குள் மறைந்திருந்த பாம்பு, தன் பூசையை நாளும் சிறுமைப்படுத்துவது யானையே எனக் கண்டு கொண்டது. யானையின் தவறுக்காக அதனை ஒறுக்க எண்ணியபாம்பு, அதன் துதிக்கையுள் புகுந்து யானையைக் கொத்தியது. யானையும் பாம்பைக் கொல்ல எண்ணித் தன் துதிக்கையை நிலத்தில் அறைந்தது. இப்போராட்டத்தில் பாம்பும் யானையும் ஒரு சேர இறந்துபட சிவபெருமான் இவ்விரண்டிற்கும் காட்சி கொடுத்து ஆட்கொண்டார்.

சீகாளத்திப் புராணத்தாற் திருக்காளத்திப் பெருமானை இவ்வாறு சிலந்தி, யானை பாம்பு ஆகிய மூன்றும் வழிபட்டுய்ந்த இவ்வரலாற்றை அறியலாம். இவ்வரலாற்றைச் சிவப்பிரகாச சுவாமிகள் ஒரு பாடலில் அமைத்து, இறைவனுடைய பக்தியில் தம்முடைய உயிரையும் பெரிதென்று எண்ணாத சிலந்தி, யானை பாம்பு ஆகிய இவை மூன்றன் பிறவிகளும் சிறந்தனவா? அல்லது காமச்



சேற்றில் உழன்று காரிகையர் தரும் இன்பமேமேல் என வாணாளை வீணாக்கும் மூடமாந்தர்தம் பிறவி சிறந்ததா? என்று வினவுகிறார். அப்பாடல் வருமாறு:

''பெருகுறும்அன்பாற் பூசனை புரிந்த
பிணங்கு நூற் சிலம்பி வெவ் வரவம்
பிறைமரப் புரற்கால் யானை என் றிவற்றின்
பிறவியோ இதழ்முறுக் கவிழ்ந்து

முருகுமிழ் நறுமென் மலர்புனைந் துன்னை
முற்றும்வந் தனைபுரி யாமல்
முகிழ் முலை மகளிர் மயிலிடை யழுந்தும்
மூடர்தம் பிறவியோ நல்ல?

திரைபொருங் கங்கை உவட்டெடுத் தொழுகும்
செஞ்சடை மிசைஒரு துளிநீர்
தெரித்தவர் தமையும் நறவு கொப்பளிக்குஞ்
செழுமலர் கற்பக வேந்தும்

எரிபுரை இதழ்செங் கமல நான்முகனும்
எய்தரும் பதத்தில் வைத்தருள்வோய்
இட்டநன் குதவி என்கரத்திருக்கும்
ஈசனே மாசிலா மணியே''

இப்பாடலில் சிவப்பிரகாச சுவாமிகள் மேலும் தெரிவித்துள்ள கருத்து வருமாறு: இறைவன் தம் திருமுடிமீதே கங்கையை அணிந்திருக்கிறார். ஆகவே அவர் எப்பொழுதும் கங்காபிசேகம் கொண்டே திகழ்கிறார். அவ்வாறு கங்கையால் எப்பொழுதும் அபிசேகம் கொள்பவராகிய இறைவர், பக்தர்கள் தமக்காகச் செய்யக் கூடிய அபிசேகங்களைப் பெரிதும் உவக்கிறார். இறைவரின் திருமுடிமேல் சிறிதளவு நீரைத்தெளித்து நறுமலர்களை அணிவிக்கின்றவர்கள் பெறுகின்ற பேறு மகத்தானது. கற்பக மலர்களுக்கு வேந்தன் இந்திரன். செங்கமல மலரிருக்கை கொண்டவர் பிரம்மா. அத்தகைய இந்திரனை விட, பிரம்மாவை விட மிக உயர்ந்த நிலையை சிவபெருமான் சிறிதளவு நீரால் தம்மை அபிசேகித்து நறுமலர்களைப் புனைவிக்கும் பக்தனுக்கு அருள்கிறார். அப்படிப் பட்ட பூசையின் அருமை அறிந்து பூசித்த சிலந்தி,



யானை, பாம்புகளைப் போல் வாழாமல், மூடர்களாகவா வாழ்வது என்ற உயர்ந்த கருத்தையும் அமைத்து கவிநயத்தோடு இப்பாடலை வடித்திருக்கிறார் சிவப்பிரகாசர். சிவப்பிரகாசர் கவிதைக் கடலில் இப்பாடலைப் போன்ற நன்முத்துக்கள் ஆயிரம் ஆயிரம் உள்ளன.

---

# குறளமுதம்

## உன்னை நீ திருத்திக்கொள்

நம்மில் பெரும்பாலோர் உலகில் மற்றையோர் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதில் தான் ஆர்வத்தைக் காட்டுகிறோம். மற்றைவரை நோக்கி ஒருவிரலைச் சுட்டும்போது மற்ற நான்குவிரல்களும் நம் குற்றத்தையும் சுட்டிக்காட்டினாலும் நாம் நம்மைத் திருத்திக் கொள்ள எண்ணுவதே இல்லை. நாம் குறையில்லாதவர்களாக முதலில் நம்மை மாற்றிக் கொண்டபிறகே மற்றையோர் குற்றங்களைக் களைய முயல்தல் வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் திருவள்ளுவர்.

''ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு''

## பழமா? காயா?

நம்முடைய தோட்டத்திலுள்ள பழமரங்களில் காய்களும் உள்ளன. பழுத்த கனிகளும் உள்ளன. குழந்தைகள் நம்மைப் பறித்துத்தரக் கேட்கும்போது உண்ண இனிமையாய் இருக்கும் பழங்களையே பறித்துத் தருகிறோம். அதே போல் நாம் மற்றவர்களோடு உரையாடும்போது பயன்தரும் இனியசொற்களையே கூறவேண்டும் என்று அறிவுறுத்தும் திருவள்ளுவப் பெருமான், இனியவை அல்லாத சொற்களைக் கூறுவது, கனிகள் இருக்கவும் காய்களைப் பறித்து உண்பதற்கு ஒப்பாகும் என்று கூறுகிறார்.

''இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்ப காய்கவர்ந் தற்று''

என்பது வள்ளுவர் வாய்மொழி.

## பூமி கற்றுத்தரும் பாடம்

நாம் வாழும் பூமியானது நமக்கு நாள்தோறும் கற்றுத்தந்து கொண்டிருக்கும் பாடம் பொறுமை. தீயவர்கள் தீயசெயல்களைச் செய்தாலும், சிறுமையான சொற்களைக் கூறிப் பழித்தாலும் தூயவர்கள் பொறுமை காட்ட வேண்டும் என்று அறிவுறுத்தும் வள்ளுவர் ''நிலமானது தம்மை அகழ்வாரைத் ''தூரப்போ'' எனக் கூறித் தள்ளிவிடாமல் அவர்களையும் கூட தாங்கிக் கொள்கிறது அல்லவா! அதைப்போலவே நாமும் பொறுமை காட்டி நம்மை இகழ்வார் செயலையும் சொல்லையும் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்று கூறும் திருக்குறளே

''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார் பொறுத்தல் தலை''.

> யான் திருக்குறளைத் தமிழ்மொழியிலேயே படிக்க வேண்டும் என்ற ஆசையினால்தான் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கினேன்.
>
> —மகாத்மாகாந்தி

# வள்ளுவரும் வள்ளலாரும்

தவத்திரு ஊரன் அடிகள்



வள்ளற்பெருமான் இராமலிங்க அடிகள் திருக்குறளில் பெரிதும் ஈடுபாடுடையவர். திருக்குறள் திருமந்திரம் திருவாசகம் இம்மூன்றும் வள்ளலார் கண்ட 'பிரஸ்தானத்திரயங்கள்'. திருவாசகம் வள்ளற்பெருமானின் வழிபடு நூல். திருமந்திரம் வள்ளற்பெருமானுக்கு இறைவன் உபதேசித்தருளிய நூல். திருக்குறள் பெருமானால் எடுத்தாளப் பெற்ற நூல்; வகுப்பு நடத்தப்பெற்ற நூல்.

அடிகள் அருளிய திருவருட்பாவில், தம்நெஞ்சுக்குக் கூறுவதாகப் பாடிய நெஞ்சறிவுறுத்தலில் குறட்பாக்களையும், குறட்டொடர்களையும், குறட்கருத்துக்களையும் பலவிடங்களில் எடுத்தாண்டுள்ளார். சில வருமாறு:

கூத்தாட் டவைசேர் குழாம்விளிந்தாற்
போலுமென்ற
சீர்த்தாட் குறள்மொழியும் தேர்ந்திலையே

நெஞ்சறிவுறுத்தல், கண்ணி 4

**இதனுள் அடிகளார்**

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று-332

என்னும் நிலையாமை அதிகாரக் குறட்பாவை எடுத்தாண்டுள்ளார். 'குறள் மொழியும் தேர்ந்திலையே' எனத் தம் நெஞ்சுக்கு இடித்துரைத்தும் கூறுகின்றார்.

'செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனில் தீயதென்ற தெண்ணிலையே-
மல்லல்பெறத்
தன்னைத்தான் காக்கில் சினங்காத்து
என்றதனைப்
பொன்னேபோல் போற்றிப் புகழ்ந்தி
லையே-துன்னி
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னுந்
திகழ்வாய் மையும்நீ தெளியாய்
-நெஞ்சறிவுறுத்தல் 433,434,435

தொடர்ந்து வரும் இம்மூன்று கண்ணிகளிலும் மூன்று குறட்பாக்களை அடிகளார் எடுத்தாண்டுள்ளார்.

செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்
கால்
தன்னையே கொல்லும் சினம்

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை

என்னும் இம்மூன்று குறட்பாக்களையும் முறையே அம்மூன்று கண்ணிகளிலும் எடுத்தாண்டுள்ளமை காண்க. திருக்குறளைத் தம் நெஞ்சுக்கு எடுத்துரைக்கும் அடிகளார் 'இதனைப் பொன்னைப் போல் போற்றிப் புகழ்ந்திலையே' எனக் கேட்கின்றார்.

உறங்குவது போலுமென்ற ஒண்குறளின்
வாய்மை
மறங்கருதி அந்தோ மறந்தாய்-கறங்கின்
நெருநல் உளனொருவன் என்னும் நெடுஞ்
சொல்
மருவும் குறட்பா மறந்தாய்-
நெஞ்சறிவுறுத்தல் 466,467

**இக்கண்ணிகளில் அடிகள்**

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு 339

நெருநல் உளனொருவன் இன்றில்லைஎன்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு 336

என்னும் இரு குறட்பாக்களையும் எடுத்தாண்டுள்ளார்.

குறட்பாக்களைத் தம் நெஞ்சுக்கு எடுத்துக் கூறி' 'குறள் மொழியும் தேர்ந்திலையே.' தெளிவாய்', 'ஒண் குறளின் வாய்மை மறங்கருதி அந்தோ மறந்தாய்', 'நெடுஞ்சொல் மருவும் குறட்பா மறந்தாய்' என்றெல்லாம் இடித்துரைப்பதனை நாம் நம் நெஞ்சுக்கும் கூறியதாகக் கொள்ள வேண்டும்.

## திருக்குறளின் பெருமை

திருக்குறள் தோன்றியிராவிடில் ''தமிழ்மொழி என்ற ஒரு மொழி உண்டு என உலக மொழியாளர் அறியார். திருவள்ளுவர் தோன்றியிராவிடில் ''தமிழினம்'' என ஓர் இனம் உண்டு என்பதை உலக மக்கள் அறியார். திருவள்ளுவரும் திருக்குறளும் தோன்றியிராவிடில் ''தமிழ்நாடு'' என ஒருநாடு உண்டு என்பதை உலக நாட்டினர் அறியார்.

—முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்

**அடிகள் நடத்திய திருக்குறள் வகுப்பு**

பொது மக்களுக்காக முதன் முதலில் திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் இராமலிங்க அடிகளே. தம் மாணவர் உபயகலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேலாயுதனாரைக் கொண்டு அடிகள் திருக்குறள் வகுப்பை நடத்தினார். வேலாயுதனார் திருக்குறள் வகுப்பைப் பற்றிய சுவையான வரலாறொன்று அறியப்படுகிறது. கற்றார், கல்லார், இளையோர் முதியோர் எனப் பலதரத்தினரும் வகுப்புக்கு வந்தனர். வேலாயுதனார் தமது இருமொழிப் புலமை, பரந்த நூலாராய்ச்சி, கவியாற்றல் ஆகியவற்றிற்கேற்ப, வகுப்பை மிக விரிவாக நடத்தினார். மூன்று மாதமாகியும் மூன்று அதிகாரங்களேனும் முடியவில்லை. போதிய அறிவு வலியில்லார் சிலர்க்குப் பாடத்தை பின்பற்றுவது கடினமாயிருந்தது. அவர்கள் அடிகளிடஞ் சென்று முறையிட, அடிகள் ''மூடமூண்ட வித்துவானைக் கூப்பிடும்' என்றருளினார். இதனைக் கேட்டவர்களும், முறையிட்டவர்களும் வேலாயுதனாரை அடிகள் 'மூடம்' முண்டம்' எனச் சொல்லியதாக்க் கருதி உள்நகை கொண்டனர். வேலாயுதனாரை வந்ததும் அடிகள் மூடமுண்ட வித்துவான் என்பதற்கு மாணாக்கர்களின் மூடத்தை உண்ட வித்துவான் என்பது பொருள் எனக்கூறி வகுப்பை எளிதாக நடத்துமாறு முதலியார்க்குக் கட்டளையிட்டருளினார்.

அடிகள் காலத்திலும் அதற்கு முன்பும் திருக்குறள் முதலிய நூல்களைத் தக்க பெரும்புலவர்கள் முறையாகப் பாடஞ்சொல்லுவதும் கேட்கும் தரத்திலுள்ளோர் பாடங்கேட்பதும் வழக்கமே யொழிய கற்றார், கல்லார் முதலிய எல்லா தரத்தினரையும் பொதுவாகக் கூட்டி வகுப்பு நடத்தும் வழக்கமில்லை. இதிகாச, புராணச் சொற்பொழிவுகளே பொதுமக்களுக்காகச் செய்யப்பட்டு வந்தன. இந்நிலையில் அக்காலத்தில் முதன்முதலாகப் பொதுமக்களுக்காகத் திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் இராமலிங்க அடிகளே.

வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபில் யானொருவனன்றோ எனப்பாடும் வள்ளற்பெருமான் தனக்கு முன்னிருந்த ஞானியாகிய வள்ளுவர் பெருமானின் வாய்மொழிகளைப் பொன்னைப்போல் போற்றிப் புகழ்ந்து தம் நெஞ்சுக்கு எடுத்து உரைத்தார். பிறருக்கும் உணர உரைப்பாராய் வகுப்பும் நடத்தினார். வள்ளுவரும் வள்ளலாரும் நமக்கு இரு கண்கள். திருக்குறளும் திருவருட்பாவும் நமக்கு இரு விழிகள்.

வாழ்க இருவர்தம் பெருநெறி.

# வைத்தியநாதா மருந்து தருவாய்



பி. பாண்டியன் ஐ. ஏ. எஸ்.

புத்தம் புதியவுயிர் தந்த பரம்பொருளைச்
சித்தத்தில் வைத்தின்று சேவித்தேன் எத்திக்கும்
காக்கும் முருகன் கருணைமிகு பூங்கழல்கள்
பூக்களெனச் சென்னி புனைந்து.

சதாசிவன் சக்தியுடன் விட்டுணு மூல
முதல்வன் கணேசன் முருகன்-உதயநற்
சூரியன் ஆனஆறின் சூக்குமம் சொன்னவன்
பேரருள் வேலவனைப் பேசு.

நான்சொல்லி யோவென் குறையறிய வேண்டுமேல்
வானவர் வாட்டம் தவிர்த்தவா!-தேன்சொல்லி
வள்ளி மனத்துள் புகுந்தாய் எனதின்பக்
கள்ளவிழி பாமலர்நீ காண்.

வேதங்கள் ஐயாவென் றாழ்ந்தகன்ற நுண்ணியனே
சீதக் கலாபமயில் தேர்ந்தவனே!-பாதங்கள்
என்புன் றலையில் இரக்கமுடன் வைத்தவனே!
அன்பனே ஆறுமுக னே.

ஆயிரம் ஆதவன் ஆங்கெழு மாபோல் ஓர்
தூய மயில்மேல் ஒளிப்பிளம்பு பன்னரும்
மாயிருள் நீக்க வருமுன் கோனேஎன்
தாயினும் மேலோன் கழல்சர ணாமே!

என்பால் கெடுதல் நினைப்பவ ருக்கும்யான்
அன்பால் அவரை அணைக்க அருள்செய்ய
என்பால் எனக்குள் ஓர்பெரும் பற்றது
பொன்போல் சுடர அருள்வாய் முருகனே!

முருகா! குமரா! வருவாய் கனவில்
அருளே பழுத்த கனியை அருளாய்!
குருவாய் அருளிக் கொடுத்தாய் குடிலம்!
திருவே! தெளிவே! தினமும் வருகவே!

பழநியில் அன்பாய்ப் பழுத்த பழத்தை
அழகுப் பொருளை அருளின் வடிவை!
பழகு தமிழின் பசுமையை! இன்பம்
செழித்தேன் முருகனைத் தேர்ந்தனை நெஞ்சே!

சண்முகா! வேலா! சரவணா! சங்கரர்
கண்மணிக் கந்தா கடம்பா! கருணையால்
எண்முகங் கொண்டெண் டிசையாள் இறைவா!
பண்மலிஎன் பாவில் பழுக்கும் கனியே!

வேலும் மயிலும் விளித்திடு கோழியும்
சேல்விழி தேவானை தித்திக்கும் வள்ளியும்
காலனை வெல்லும் ஓர் வாசியுஞ் ஆறுநற்
சீல முகங்களும் என் சிந்தையி னுள்ளே!

என்ன தவம்யான் புரிந்தேன் இறைவனை
அன்னையின் மேலான ஆறு முகனையான்
சொன்மாலை கொண்டு தொழுது வணங்கவே
என்னைத் தடுத்தாள் இறைவன் முருகனே!

செங்கோட்டுவெற்பன் திருவடி போற்றிட
எங்கோன் முருகனைக்கருள்க என்றன்நல்
தங்கவேல் மேலும் தனிமயில் மேலும்யான்
சங்கத் தமிழ்சொல்லத்தாநின் அருளே!

வருவது சொல்லும் குருவே நமஓம்!
தருவது தந்தருள் செல்வா நமஓம்!
குருவது வான குமரா நமஓம்!
கருவது புகாமல் கழறாய் நமஓம்.

வைத்திய நாதா மருந்து தருவாய்யான்
நித்திய வாழ்வு பெறவே, நிறைவதே
வைத்தருள் செய்வாய் முருகாஎன் வாழ்வேஎன்
புத்தமுது நின்கழலே சென்னி புனைந்தேனே!

கோவணம் கட்டிக் குறிப்பறி வித்தவன்
ஆவணக் காப்பின் அரும்பொருள் சொன்னவன!
பூவண நாதர் புரிதவத் தால்வரும்
பாவணம் மேவும் பரமன் முருகரே!

சஞ்சல மென்ற தணலில்வெந்து சாகாமல்
அஞ்சலெனக் காத்தருள்வாய் ஆறுமுக வானமுதே
கொஞ்சுமொழி மாதர் குறையிடையைநோக்காமல்
தஞ்சமாம் நின்கழலே காணஅருள் சண்முகனே!

மாதர் அனைவரையும் மாட்சிமிகும் அன்னையராய்
தீதற நெஞ்சில் தெரிந்திடுவ தெக்காலம்?
பாதக எண்ணம் பறிபோவ தெக்காலம்!
நாதா குமராநின் நல்லருளை நாட்டுவையே!

வாசி மயிலேறும் வள்ளல் முருகையா!
மாசில் மணியே! மரகத வள்ளியம்மை
நேசித் திருக்கும் நிதியேயென் ஆருயிரே!
பூசினேன் நின்றன் புனிதநீறென் நெற்றியிலே!

வாழ்வும் வளமும்நீ! வற்றாத செல்வம்நீ!
தாழ்வகற்றும் தண்ணார் தமிழ்நீ அமுதுநீ!
ஏழ்பிறப்பும் என்னைத் தொடரும் குருநீயே
தோழன்நீ சொல்லுதமிழ் பாடல்நீ சுந்தரனே!

என்ன பணியை எனக்கிடினும் யானதைச்
சொன்ன படியே தொடருவேன் வேலவா
அன்னையின் மிக்கோனே! ஆறுமுக அப்பனே!
முன்னைத் தவத்தின் முழுப்பயன் ஆனவனே!

தூக்கம் ஒழிந்தது! சூக்குமம் கண்டனன்!
நீக்கமில் லாமல் நிறையருட் பாலினை
ஆக்க முடனே அருந்திடச் சொல்வினை
சாக்காடு நீக்கிய சண்முக தேசிகனே!

வேலவன் கழலே வினையறுக்க வல்லதாம்!
வேலன் கழலேநீ வேண்டும் வரந்தருமாம்!
வேலன் கழலே பிறப்பறுக்கும் பெற்றியதாம்!
வேலன் கழல்லால் வேறுதுணை இல்லையம்மா!

முகமா றுடைய முழுமுதல் தேவே!
செகமீ தெனைப்புரக்கும் செல்வா! யுகமீதுன்
ஆட்சியே! உன்னையாம் அண்டினோம் ஆண்டருள்
மாட்சி மிகுந்தமணி வா. [வாய்

நன்றி உணர்வுயான் நாட்டிடநீ பேரருளை
என்றனுக்குத் தந்தாய் இளங்குமரா-உன்றன்
இருதாளென் சென்னியில் ஏற்றினேன் வாழ்க!
குருபராநின் நாமம் கொழித்து.



விதியையும் வெல்லலாம்
கதை: நிறைமதி
படம். M.N. ராஜா
சத்தியலோகத்தில் பிரம்மதேவர் வழக்கம்போல் தம்படைப்புப்பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அப்பொழுது திருமால் பிரம்மதேவரைக் காண வரவே மகிழ்ச்சியுடன் பிரம்மா திருமாலை வரவேற்று இருக்கையளித்து அமர வைத்தார்.
"தந்தையே! தங்கள் வருகையில் ஏதும் விசேடம் உள்ளதா?" என்று பிரம்மா வினவ, திருமாலும் புன்னகை புரிந்து "உயிர்களுக்கு நீ எழுதும் தலை எழுத்தே விதி எனப்போற்றப்படுகிறது. உன் விதிப்படியே எல்லாம் நடக்கும் என்பதும் உண்மை. ஆமாம்! நெய்தல் நாட்டு இளவரசிக்கு நீ யாரைக் கணவனாக விதித்திருக்கிறாய்?என்றார் திருமால்.
"மன்னனோ தன் சகோதரி மகனை இளவரசிக்கு மண முடிக்க விரும்புகிறான். இராணியோ தன் சகோதரன் மகனையே இளவரசிக்கு மணம்புரிய விரும்புகின்றாள். இருவருடைய ஆசையும் நிறைவேறப் போவதில்லை. அதே ஊரிலுள்ள செக்காட்டும் மூடவனைத்தான் அவள் மணப்பாள் என்றார்" பிரம்மா.
வைகுந்தம் திரும்பிய திருமால், பிரம்மாவின் விதியைச்சோதிக்க விரும்பி கருடனை அழைத்தார். "அதோ! அந்த மூடவனைக் கொண்டுபோய் ஆட்களே இல்லாத ஒரு தீவில் விட்டு வா, போ" என்று உத்திரவிட, கருடாழ்வாரும் பறந்துபோய் திருமாலின் கட்டளையை உடனே நிறைவேற்றினார்


"சுவாமி கருடாழ்வாரே! யாருமில்லா தீவில் என்னை அனாதையாய் விட்டுப் போவதுவோ உமக்குத் தருமம். நான் என் உணவுக்கு என்ன செய்வேன்?" என்று முடவன் முறையிட, "வருந்தாதே! இரு வருகிறேன்" என்று கூறி கருடாழ்வார் மீண்டும் நெய்தல் நாட்டிற்கே பறந்து வந்தார்
அரண்மனை நந்தவனத்தில் இருந்த ஒரு பெரிய பழக் கூடை கருடாழ்வாரின் கண்களில் தென்பட "இதை முடவனிடம் சேர்த்துவிடுவோம்" என்று எண்ணி கருடாழ்வார் பழக்கூடையைத் தூக்கிப் பறந்து போய் முடவனிடம் கூடையை வைத்துத் தம் பணி முடிந்ததென வைகுந்தம் போய்ச் சேர்ந்தார்.
முடவன் பழங்களை எடுத்து உண்ண முற்பட்டபோது என்ன அதிசயம்! கூடையிலிருந்து வெளியே வந்தாள் இராஜகுமாரி. "என் தாய் என்னைத் தந்தைக்குத் தெரியாமல் என் மாமாவின் ஊருக்கு அனுப்ப அல்லவா பழக்கூடையில் வைத்து மறைத்தாள். நான் இங்கெப்படி வந்தேன்?" என்று திகைத்த அவள், பிரம்மாவின் விதி மாறாமலே முடவனுக்கு வாழ்க்கைப்பட்டாள்!
இப்படித் திருமாலாலும் மாற்ற முடியாத பிரம்மாவின் விதியை மாற்றவல்லது முருகப்பெருமானின் திருவருள் ஆகும். முருகப்பெருமானின் பாதம்பட்டு அழியும் பிரமனின் தலை எழுத்து என்று அருணகிரிநாதர் பாடியுள்ளார். முருகப்பெருமானின் திருவடிகளைத் பணிவோம். விதியை வென்று சுகமுற வாழ்வோம்.




கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

## 1. பொறுமையே உருவான புனித அன்னை.

குமரகுருபர சுவாமிகள் சிதம்பரம் நடராஜப் பெருமானிடம் வரம் கேட்டார். ''எம்பெருமானே! குளிரிலிருந்து உடலைக் காத்துக் கொள்ள ஒரு கந்தைத்துணி, நிறைய தையல் போடப்பட்டதாக வேண்டும். படுப்பதற்கு ஒரு ஒட்டுத்திண்ணை, பசிக்கு உப்பில்லாத கஞ்சி சிறிது வேண்டும். உன் அடியார்களின் உறவு வேண்டும். இத்தகைய எளிய வாழ்வையே உன்னிடம் வேண்டக்கூடிய நான் என்றைக்காவது மனம்மாறி வேறு ஏதாவது கேட்டால் நீ அளிக்கமாட்டேன் என மறுக்கவேண்டும்'' என்றார்.

எளிய வாழ்க்கையும் உயர்ந்த எண்ணமும் ஒருவனை மேன்மை பெறச்செய்து விடும். இறைவனை வணங்கி இன்புறுவதைத் தவிர மோட்ச வீடு கூட வேண்டாம்.

''கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி
வீடும் வேண்டா விறலினார் ''

என்று இந்நிலையைக் குறித்தார் சேக்கிழார். இல்லறமோ துறவறமோ எதிலிருந்தாலும் இறைவனிடம் அன்பு காட்டும் அடியார்களுக்கு எல்லா நலன்களுமே ஏற்படும் என்பது நம் முன்னோர் கண்ட உண்மை.

அடியார்கள் இறைவனைத் தாயாகவும், தன்னை மகவாகவும், இறைவனைக் கணவனாகவும் தன்னை மனைவியாகவும், இறைவனை மருத்துவனாகவும் தன்னை நோயாளியாகவும், இறைவனைத் தனது நண்பனாகவும் கொண்டும் வழிபட்டு அவன் திருவருள் பெற்றதுண்டு. சைவத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானைத் தனக்கு நண்பராகக் கொண்டதால் தம்பிரான்தோழர் என அழைக்கப்பெற்றார். வைணவத்தில் குசேலர் கண்ணனைத் தனது பள்ளித் தோழனாக அடைந்து வழிபடும் பேறுபெற்றார். அவரது பக்தியும் சீலமும் நிறைந்த வாழ்க்கையும் அவரது கருத்துக்களும் நம்மவருக்கு என்றும் நன்மை பயப்பன.

வடநாட்டில் அவந்தி என்ற ஊரைச் சேர்ந்தவர் சுதாமா என்ற இந்த அந்தணர். கந்தைத் துணிக்கு வடமொழியில் குசேலம் என்ற பெயர் உண்டு. குசேலம் என்ற கந்தையை அணிந்தமையால் உலகம் அவரைக் குசேலர் என்றே அழைத்தது.

மனிதன் ஏழையாகப் பிறக்கலாம். அவனைச் சுற்றியுள்ள அவனது மனைவிமக்கள் நற்குணமும் அன்பும் நிறைந்தவராக இருந்து விட்டால் அவனது ஏழ்மை அவனுக்குத் தெரியாது.

மேனாட்டில் ஒரு பணக்காரன் தன் வியாபாரம் திடீர் எனக்குறைந்து ஏழையாகிவிடக்கூடிய நிலை ஏற்பட, தன்னுடன் சுகவாழ்வு வாழ்ந்த மனைவி இதையறிந்தால் அதிர்ச்சி தாங்கமாட்டாள் என எண்ணி நிகழ்ந்ததை அவளிடம் கூறத் தயங்கினான். அந்தப் பணக்காரனின் அந்தரங்க நண்பன் ஒருவன், '' மனைவியிடம் எதையும் மறைக்காதே, அதைத்தான் தாங்கமாட்டாள். உண்மையைக் கூறினால், அதை ஏற்று ஏழ்மை நிலைக்கேற்றவாறு திட்டமிட்டுக் குடும்பத்தை அழகாக நடத்துவாள். அது தான் உண்மையான வாழ்க்கைத் துணைவியின் உயர்வு'' என்றான். நண்பனின் சொற்படி பணக்காரன் தன் உண்மை நிலையை மனைவியிடம் கூற, அந்தப் பெண்மணி ''இதற்கு ஏன் அஞ்சவேண்டும்? சிலவுகளைக் குறைத்துச் சிக்கனமாக வாழ்வோம். நானும் வேலை செய்து பொருளீட்டி வருகிறேன். கவலைப் படாதீர்கள்'' என்று ஆறுதல் கூறினாள். நண்பன் பணக்காரனைப் பார்த்து ''அன்பரே! நீங்கள் இன்றுதான் பணக்காரர். ஏழையல்ல. இந்தமாதிரி செல்வம் முன்னால் உமக்கு இருந்ததா? **''You were never richer before ''** என்றான். எனவே உத்தம குணமுள்ள மனைவி உலகில் ஒரு பெரிய சொத்து. குசேலரின் மனைவி நற்குடியிற்பிறந்தவள். விருந்தாளிகளை வரவேற்று உபசரிப்பதில் மிக அன்புடையவள். (விருந்துவேண்டியதில்லை. இன்முகத்துடன் வரவேற்பதே பாதிக்களைப்பை நீக்கிவிடும் என்பது குறிப்பு) கணவன் நினைப்பதையே அதே நேரத்தில் நினைக்கும் தன்மையுடையவள். வாய்மையுள்ளவள். சினமில்லாதவள். கிடைத்ததை வைத்துக் கொண்டு திருப்தியடையும் கற்புக்கரசி.

''மாசிலாக் குலத்து வந்தாள்; வருவிருந்து
உவப்ப ஊட்டும்
நேசமிக்கு உடையாள்; கொண்கன் தனைப்
பரிந்து ஒழுகும் நீராள்;
தேசுறு வாய்மையுள்ளாள்; சினந்திடல் என்று
மில்லாள்
பேசுதிண் கற்பு வாய்த்தாள் பெற்றதே
கொண்டுவப்பாள்''

மக்களில்லாதவரை 'புத்' என்ற நரகத்தில் தள்ளிவிடுவார்கள் என ஒரு வழக்குண்டு. சில புத்திரசிகாமணிகள் தாய்தந்தையரைப் படுத்தும்



பாட்டைக் கண்டால் இவர்கள் ஏன் இத்தகைய மக்களைப் பெற்றுப் பின்னர் கலங்குகின்றார்கள். புத் என்ற நரகமே அவர்களுக்கு நிம்மதியளித்திருக்கும் போலிருக்கிறதே எனக்கூட நினைக்கத் தோன்றுகிறது. இத்தகைய நரகத்திலிருந்து தப்புதற்கும் தன் குல தருமங்களையும், தம் முன்னோருக்குச் செய்ய வேண்டிய பிதிர்க்கடன் முதலானவற்றை விடாமல் செய்ய சந்ததி வேண்டும் என குசேலர் வாழ்க்கையை நடத்தினார். மலைபோல் செல்வம் உடையவர் மகிழ ஒரு குழந்தைகூட அளிக்காத தெய்வச் செயல், குசேலருக்கு அளவற்ற மக்களை அளித்துவிட்டது. இருபத்தேழு நட்சத்திரங்களிலும் குழந்தைகள் பிறந்தன. இருபத்தேழல்ல, அதிகமான குழந்தைகளே பிறந்தன.

உலகம் எவரையும் நல்லவன் என்று கூறியதேயில்லை. எல்லோருடனும் பேசி சுமுகமாயிருந்தால் வாயாடி என்பர். பேசாமலிருந்தால் கர்வக்காரன் என்பர். நன்கொடை நிறைய கொடுத்தால் ஊதாரி என்பர். கொடாவிட்டால் கருமி என்பர். சீக்கிரம் இறந்து விட்டோம் என்றால் 'பாவி' யாவரையும் தவிக்கவிட்டுப் போய்விட்டான் என்பர். உயிருடனிருந்தால் ''ஆசையும் பற்றும் விடவில்லை. அதனால் சாகமாட்டான்'' என இருக்கிறான் என்பர். இத்தகைய உலகம் பலமக்களைப் பெற்ற குசேலரைக் காமமே உருவானவர் எனப்பழித்துப் பேசியது. குழந்தைகளைக் காப்பதற்கு குசேலர் என்றைக்கும் அயலவரை நாடவில்லை.

''பல்லெல்லாம் தெரியக்காட்டிப் ▫ருவரல்
முகத்தில் கூட்டிச்
சொல்லெலாம் தெரியச்சொல்லி துணைக்கரம்
விரித்து நீட்டி
மல்லொம் அகலவோட்டி மானமென்பதனை
வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ! இழிவு! இழிவு
எந்த ஞான்றும்''

''ஏற்பது இகழ்ச்சி'' என்பதை அறிந்த இப்பெரியார், காட்டில் சென்று அறுவடைக்குப்பின் விவசாயிகள் எடுத்துச் செல்லும்போது கீழே உதிர்ந்து அவர்களது கால்கள்பட்டுப் பூமியில் பதிந்து கிடக்கும் தானியமணிகளை நகத்தால் கிள்ளி எடுத்து மனைவி கையில் கொடுப்பார். அந்த அம்மை அதை வாங்கிக் குற்றி, சமையல் செய்து விருந்தாளிக்கு ஒரு பங்கு வைத்து, குழந்தைகளுக்கும் கணவருக்கும் கொடுத்து, தனக்குக் கிடைத்ததை உண்டு, திருமாலின் திருவடிகளை மறவாது வழிபட்டுக் கொண்டிருந்தாள்.


''பாண்டத்தில் ஒட்டிய பருக்கைகளைத்திரட்டி
பக்தியாய்ப் புருஷனுக்கு அளித்திடுவாள்
சட்டியை அலம்பி அவள் குடிப்பாள்
அந்த உத்தமி பட்டினியோடிருப்பாள்''

என அந்த அம்மை உணவிட்ட அழகைக் கூறுகிறது நம் தாய்நாட்டில் ஒரு பழைய நாடோடிப்பாடல்.

ஏழையாய்ப் பிறப்பது துன்பம். அதிலும் ஏழைக்கு அளவுக்கு மீறிக் குழந்தைகள் பிறப்பது துன்பத்திலும் துன்பம். ஏழையாகவும் பெருங்குடும்

# திருப்புகழ் ஓதுங்கருத்தினர் சேரும் திருத்தணி

## டிசம்பர்-ஜனவரி படிவிழா



ஐநூற்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு அருணகிரிநாதர் சுவாமிகள், 'திருப்புகழ் ஓதுங் கருத்தினர் சேரும் திருத்தணி (கழகப்பதிப்பு செய்யுள் 310)'' என்றதன் உண்மையை இப்போது திருத்தணிகையில் வருடந்தோறும் காண்கிறோம்.

இந்தத் தொண்டை, ஆங்கிலப் புத்தாண்டை கொண்டாடுவதின் மூலம் 1912 ஆவது ஆண்டு ஜனவரி முதல்நாள் தோறும் தணிகைமணி ராவ் பகதூர் வ. சு. செங்கல்வராயர் எம். ஏ. அவர்களின் தமையனார் வ. சு. சண்முகம், தணிகை நாயகரைத் தரிசித்து குடும்ப ஏற்பாடாகத் துவக்கி வைத்தார். அந்த வழக்கத்தை அவர்கள் மூலமாய் வள்ளிமலைத் திருப்புகழ் சச்சிதானந்த சுவாமி அவர்கள்1917 டிசம்பர் 31ஆம் நாள் முதல் ஆர்வத்துடன் மேற்கொண்டு 1921 வருஷ முதல் வருடம் தோறும் தமது அடியார்களுடன் திருப்புகழ்பாடி அந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் நாள் அந்த வழக்கத்தை விருத்தி செய்தார். 1921 வருடம் முதல் வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகளுடன் உறுதுணையாக இருந்தவர் வள்ளிமலை மௌன குருவாமிகள். இவ்வழக்கம் வருடம் செல்லச் செல்லப் பிரபலமாகி இப்பொழுது பெரிய உற்சவம் போலப் பலதலத்து அன்பர்கள் பெருந்திரள் கூட்டமுடன் நடைபெறுகிறது.

வருட இறுதி நாளில் (டிசம்பர் 31) இரவு தணிகையில் ஒன்று கூடி நடைபெறும் திருப்புகழ் பஜனைக் காட்சி 'சிவலோகம் எனப் பரிவேறு' (286) திருத்தணிகையை உண்மையாகவே சிவலோகமெனப் பொலியச் செய்கின்றது.

1. ஆதாரம் 'அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும்''— தணிகை மணி செங்கல்வராயர்
2. மயிலை மாமுனிவர் தவத்திரு குருஜி சுந்தர ராம சுவாமிகள்.

---

பமாகவும் உள்ளவன் செல்வந்தர் வீட்டருகில் குடியிருந்துவிட்டால் அந்த வீட்டுக் குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் வாங்கியளிக்கும் பொருள்களை, அறியாமையாலும் தனக்கு வேண்டுமென்றஆசையாலும், ஏழை வீட்டுக் குழந்தைகள் தமக்கும் அந்தப் பொருள்கள் வேண்டும் எனத் தம்முடைய ஏழைத் தாய் தந்தையர்களிடம் கேட்கும்போது , அவர்கள் படும் வேதனை கூறவொண்ணாதது.

இத்தகைய சந்தர்ப்பங்களில் நமது ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கு தான் தாங்குதற்கு அரிய வேதனையும் ஏக்கமும் உண்டாகிறது. குசேலரின் மனைவி அத்தகைய துன்பம் அடைந்தாள். ஒரு குழந்தைக்கு ஆகாரம் கொடுக்க வந்தால் இரண்டு குழந்தைகள் கை நீட்டும். இரண்டாகப் பகிர்ந்து கொடுக்க வரும்போது மூன்று குழந்தைகள் மேல்விழுந்து அழும். ஒரு குழந்தை கண்ணைப் பிசைந்து கொண்டு தூர நின்று அழும்.

''அடுத்த வீட்டுச் சிறுவன் என்னிடம் வந்து உமது வீட்டில் என்ன பொறியல்? எனக் கேட்டான். அப்படி என்றால் என்ன? எனக்கு இப்போதே செய்து கொடு'' எனப் பிடிவாதம் பிடிக்கும் குழந்தையிடம் ''கண்ணே'' பொறியல் செய்ய எனக்குத் தெரியாது, அதனால்தான் செய்யவில்லை'' எனக்கூறி வேறு ஏதாவது பேச்சுக் கொடுத்து அதை மறக்கச் செய்வாள்.

பால் பழங்கள் சீனி என்றால் பார்ப்பதற்கு எந்த
நிறம் இருக்கும்?
எக்காலும் எங்கட்கு அளித்திடாமல் இருப்பதற்கு
உன்மனம் எவ்விதம் பொறுக்கும்?'

என இந்த நிலையை வர்ணிக்கிறார் குசேலர் சரிதம் பாடிய நாடோடிப்பாடல் ஆசிரியர்.

''அம்மா! குண்டலம், மோதிரம் சுட்டி இம்மாதிரியான அணிகளை அடுத்த வீட்டுக் குழந்தை அணிந்திருக்கிறது. நீ எனக்கு ஏன் அம்மாதிரி போட வில்லை!?'' எனக் கேட்கும் குழந்தைக்கு; கடன் கொடுத்தவனிடம், திரும்பக் கொடுக்க இயலாத ஏழை '' நாளைக்குத் தருகிறேன் '' என நாளைக் கடத்தச் சொல்லும் வார்த்தையைச் சொல்லுவாள்.

செல்வம் மிக உள்ளவர் கூடச் சிலசமயம், தம் மக்கள் கேட்பதை அளிக்க இயலாது போய் விடும். காலன் போல, கொடிய விடம் போன்ற, கொடிய நெருப்புப் போன்ற வறுமை பீடிக்கப் பட்டுப் பல குழந்தைகளுடன் பெரிய குடும்பத்தின் தாயான சுசீலை என்ன செய்வாள்?

வறுமையின் பிடியில் அகப்பட்டுத் துன்புற்ற அந்த அம்மை கணவனை வெறுக்கவில்லை. வெறுத்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. குழந்தைகளிடம் முகம் கடுத்துப் பேசவில்லை.

துன்பத்தாலும் இல்லாமையாலும் மனம் புண்பட்டுப் பலநாட்கள் உழன்ற அந்த அம்மை, ஒரு நாள் மனம் துணிந்து தன் அருமைக் கணவனிடம் வணங்கிப் பேசலானாள்.

(தொடரும்)

# கந்தவேள் கருணை



திருமுருக
கிருபானந்த வாரியார்

நான்கு விரல்கள் ஒரு பக்கமும் கட்டை விரல் மட்டும் தனித்து ஒரு புறமும் நிற்கின்றது. சில்லறைகளுடன் சேராமல் ஒதுங்கிக் கொள்ளும் அந்த விரல்தான் பதி. ஒன்றாகி உடனாகி, வேறாகி நிற்பவர் இறைவர். ஆள் காட்டு விரல் - ஆன்மா. நடு விரல், மோதிர விரல், சுண்டு விரல் மூன்றும் முறையே ஆணவம், கன்மம், மாயம் என்ற மும்மலங்களைக் குறிக்கும். இம்மலங்களினின்றும் உயிர் நீங்கி, பசுவாகிய ஆன்மா, பதியுடன் ஒன்றுபட வேண்டும். இதைச் சுட்டிக்காட்டுவது சின்முத்திரை. அது சீவனும் சிவனும் ஒன்றுபட்ட இடம்.

சின்முத்திரை தாங்கி நீலகண்டன் ஆலமரத்தடியில் அமர்ந்தார். அங்கு ஆச்சரியங்கள் நிகழ்ந்தன. எப்போதும் குருநாதர் வயதானவராக இருப்பார். இங்கோ குருநாதர் இளமை உள்ளவர்; சீடர்களான சனகாதி முனிவர்கள் வயதானவர்கள். குருவின் வியாக்கியானமெல்லாம் மொழியொழிந்த மோனத்திலேயே நடந்தது இன்னோர் ஆச்சரியம்.

''சிவஞானமானது நூல் அறிவினால்கிடைப்பதன்று; அநுபவ அறிவால் மட்டுமே கிடைப்பது'' என்று சின்முத்திரை உணர்த்தியது. அதனை உள்ளத்தில் பதித்துக் கொண்ட சனகாதி முனிவர்கள் ஒடுங்கிச் சித்திரப் பதுமைபோல் செயலற்றுச் சிவஞானத்தில் இருந்தனர். ஞான நிலையைக் காட்ட சிவபெருமான் மோன நிலையில் இருந்த ஒரு கணப்பொழுதில் பிரம்மன் முதலான தேவர்களுக்கெல்லாம் அநேக யுகங்கள் ஓடின.

சிவ மூர்த்தியின் தவ நிலையால் விண்ணில் அமரர்களும், மண்ணில் மனிதர்களும் காமஇச்சை அறவே நீங்கி முற்றுந் துறந்த முனிவர்போல் இருந்தனர். சிருஷ்டி நடைபெறவில்லை.

இச்சமயத்தில் தான் சூரபன்மன் தேவர்களுக்குக் கொடுமை செய்து கொண்டிருந்தான்.

சூரபன்மன் ஆட்சி நடத்தும் கொடுமையைப் பார்ப்போம். அவனது மந்திரி தர்மகோபன் வாயிலாக தேவர்களில் ஒவ்வொரு தேவரையும் அழைத்து விசாரிக்கிறான்.

''யார் நீ''?

''நான் 'அலரி''!

''அப்படியென்றால்......''

''ஓஹோ, நீதான் சூரியனா? இனிமேல் இங்கு பகலில் வெய்யில் சுடக்கூடாது. சுட்டால் தலையைக் கிள்ளிவிடுவேன். எங்கள் மண்டலத்தில் உன் வெப்பமே படக்கூடாது. உன் மண்டலத்துக்குச் செல்லும்போது வெப்பத்துடன் செல்ல வேண்டும்; தெரிகிறதா?''

''உத்தரவு! வருகிறேன்'' என்று கூறிச் சூரியன் புறப்படுகிறார்.

அடுத்தவர் வருகிறார்.

''நீ யார்'? என வினவுகிறான் சூரன்.

''நான் சந்திரன். அத்திரி முனிவருக்கும் அநுசூயா தேவிக்கும் புதல்வன்''.

''உன் உடல் ஏன் தேய்ந்திருக்கிறது?''

''அது என் மாமனார் கொடுத்த சாபம்''.

''சந்திரனே! என் மண்டலத்தில் நீ தேயவும் கூடாது; வளரவும் கூடாது. எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்''.

''உத்தரவு; வருகிறேன்'', என்று சொல்லிச் சந்திரன் புறப்பட்டார்.

அடுத்ததாக எமன் நடுங்கிக் கொண்டே வந்து நிற்கிறான்.

''நான்தான் எமன். அந்தகன்; கூற்றுவன் நடுவன் என்ற பெயர்களும் எனக்கு உண்டு. உயிர்களைப் பிரிப்பது என் வேலை'' என்றான்.

''அந்த வேலையை இந்த ஊரில் வைத்துக் கொள்ளக் கூடாது. இங்கே காலம் காட்டுகின்ற வேலையை ஒழுங்காகச் செய்ய வேண்டும்''.

அடுத்து இந்திரன் வந்தான்.

''யார் நீ?''

''முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் தலைவனாயிருந்த தேவேந்திரன்.''

''உனக்கு ஒரு வேலை தருகிறேன். அதை ஒழுங்காகச் செய்ய வேண்டும். கடலில் உள்ள மீன்களையெல்லாம் பிடித்து, இந்த ஊரில் உள்ள ஒவ்







வொரு வீட்டிற்கும் சென்று, எந்த வகையான மீன் எவ்வளவு தேவை என்று கேட்டறிந்து என் மக்களுக்குக் கொடுக்க வேண்டும்''.

''உத்தரவு''

வான் சுமந்த தேவர்களை மீன் சுமக்க வைத்தான் சூரபன்மன்!

அக்கினி பகவான் வந்தான்.

''யார் நீ!''

''நான் தான் முளரி''

''அப்படியென்றால்''?

''அக்கினி''

''இந்த மண்டலத்தில் சுடுகிற வேலையை வைத்துக்கொள்ளக் கூடாது. ஓடு''

அக்கினி தேவர் ஒரே ஓட்டமாக ஓடுகிறார்.

அடுத்ததாக பிரம்மன்.

''யார் நீ''?

''நான் உன் கொள்ளுப்பாட்டன். உன் அப்பா காசிபர். அவருக்கு அப்பா மரீசி, மரிசிக்கு அப்பா நான்''.

''என்ன இருந்தாலும் நீ எனக்கு பந்து என்று சொல்லிவிட்டதால் உன்னைத் துன்புறுத்தவில்லை. பஞ்சாங்கத்தில் நாள், நட்சத்திரம் பார்த்து வீடு வீடாகச் சென்று சொல்ல வேண்டியது உன்வேலை.

பகவானாகிய நாராயணர் வந்தார்.

''யார் நீ?''

உன் பாட்டனுக்குப் பாட்டன்; நாராயணன்.

''உனக்கும் கடினமான வேலை தரக்கூடாது. இந்த மண்டலத்தில் உள்ள அவ்வளவு வீடுகளுக்கும் சென்று அவர்கள் கேட்கின்ற வரங்களைக் கொடுத்துக் கொண்டிரு.''

இவ்வாறெல்லாம் தேவர்களைத் துன்புறுத்தி சூரபன்மன் வானவர்களை எப்படி வேலை வாங்கினான் எனப் பார்ப்போம். காலையில் தென் கடலில் உள்ள தனது தலைநகரான வீரமகேந்திரபுரியில் வேலை செய்யும்படியும், உச்சி வேலையில் தன் தம்பி தாரகனின் நகரமாகிய மாயமாபுரத்தில் வேலை செய்யும்படியும், மாலையில் மற்றொரு

சகோதரனாகிய சிங்கமுகனின் ஊராகிய ஆசுர நகரில்வேலை செய்யும்படியும் பணித்தான். அலைந்து செய்யும்படியும் பணித்தான். அலைந்து அலைந்து நிலைகுலைந்து போனார்கள் தேவர்கள். இதை அருணகிரிநாதர் பாடுகிறார்.

நெறி தவறி அலரிமதி நடுவன்மக பதிமுளரி
நிருதிநிதி பதிகரிய வனமாலி
நில வுமறை யவனிவர்க ளைலைய அர சுரிமைபுரி
நிரு தனுர மறஅயிலை விடுவோனே.

தேவேந்திரன் பொன்னுலகை விட்டுத் தேவர்களோடும் இந்திராணியோடும் மேருமலை சென்றான். சூரபதுமனுடைய மகன் பானுகோபன் வானுலகமாகிய பொன்நாட்டை எரித்துத் தன் மகன் சயந்தனையும் ஏனைய தேவர்களையும் சிறைப்பிடித்த செய்தி கேட்டு மிகவும் வருந்தினான். மேரு மலையில் ஒரு புறத்திலிருந்து எம்பெருமானை நோக்கித் தவம் புரிந்தான். அவனது தவத்திற்கு இரங்கி பரமேசுவரர் காட்சி தந்தார்.

''கருணாமூர்த்தி! சூரபன்மன் என்னையும் தேவர்களையும் துயரக் கடலில் ஆழ்த்துகிறான். என் மகன் சயந்தனையும் தேவர்களையும் சிறையில் அடைத்து வைத்து, எனது நகரமாகிய அமராவதியைக் கொளுத்தி இடர்கள் பல செய்கிறான். அந்தச் சூராதிகளை அழித்து எங்களைக் காத்தருள வேண்டும்'' என்று இந்திரன் வேண்டினான்.

''இந்திரா'' என்னை நிந்தித்து தட்சன் யாகம் செய்த போது அதில் நீயும் மற்றவானவர்களும் கலந்து கொண்டதால் இத்துன்பம் வந்தது. வருந்தாதே; விரைவில் குமரக்கடவுள் தோன்றி சூராதியசுரர்களை அழித்து உங்கள் துயர் தீர்ப்பான்.''என்று கூறி மறைந்தார் எம்பெருமான்.

'சிவபெருமானோ கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து யோகம் செய்து கொண்டிருக்கிறார்-உமா தேவியாரோ இமவான் மகளாய்த் தோன்றித்தவம் செய்து கொண்டிருக்கிறார். இவர்கள் இப்படித் தவசியாக இருந்தால் குமரக்கடவுள் எப்படித் தோன்றுவார்? குமரக் கடவுள் அவதரித்தால் தானே நம் குறை நீங்கும்?'' என்று எண்ணிய இந்திரன் மனோவதி என்ற மாநகரை அடைந்தான். அங்கே வியாழ பகவானின் மனைவியிடம் இந்திராணியை விட்டுவிட்டுத் தேவர்களுடன் பிரம்மலோகம் சென்றான். குமரக்கடவுள்தோன்றுவார் என்று பரமேசுவரர் அருளியதாக பிரம்மனுக்கு உரைத்தான்.

''இந்திரா! நானும் திருமாலும் தேடிக் காண முடியாத கண்ணுதற் பெருமான் வெள்ளியங்கிரியில் சனகாதி முனிவர் நால்வருக்கும் யோக முத்திரையை காட்டி வீற்றிருப்பது நம் துன்பத்தைப் போக்கவேயாகும். மகனுக்கு ஒரு பெரிய கோடைக் கட்டி வந்த காலத்துத் தாய் தந்தையர் அதனை நசுக்க மனம் கொள்ளாமல் பிறரைக் கொண்டு மகனை துன்புறுத்திப் பிணியைப்போக்குவர். மகன் மீதுள்ள கருணையினால்தான் அப்படிச் செய்கிறார்களேயன்றிக் கோபத்தால் அல்ல. நமக்குத் தாயும் தந்தையுமாகிய எம்பெருமான், அகந்தை மிகுந்துபோன நம் தீவினைகளை நீக்கவே சூரபன்மன் முதலியோரால் இக்கொடுமைகளை இழைக்கிறார். அது தெரியாதது போல் மோன நிலையில் இருக்கிறார்'' என்று பிரம்மன் கூறினார்.

# பொன்மொழி

**அடுப்படி இல்லாத வீடு இருக்கலாம்**
**திருப்புகழ் இல்லாத வீடு**
**இருக்கக்கூடாது!**

**—திருமுருக கிருபானந்த வாரியார்.**

''பெற்றிடுங் குரவரானோர் பிள்ளைகள் தம்பால் நோயொன்
றுற்றிடில் பிறரைக் கொண்டும் உறுதுயர் செய்து தீர்ப்பார்
மற்றவர் தம்பால் அன்போ வன்கணோ அது போல் நம்பால்
பற்றிய பவங்கள் தீர்ப்பான் பரமனும் இவை செய்தான்.''

குமரக் கடவுளின் பிறப்புக்கு வழி காணாமல், தேவர்கள் வைகுந்தம் சென்று திருமாலைக் கண்டனர். ''சிவபெருமானின் யோகநிலை கலைந்து பார்வதி தேவியை அவர் மணந்து கொண்டால் தான் தேவர்கள் துயர் நீங்கத் தனிப்பெருந் தெய்வமாம் சுப்பிரமணியப் பெருமான் அவதாரம் செய்வார். பிரம்மனே! நீ உடனே மன்மதனை அழைத்துச் சிவபெருமானிடம் அனுப்பி அவர் மனத்தில் மலைமகள்பால் மையல் உண்டாகச் செய்'' என்று பிரம்மனைப் பணித்தார் திருமால்.

மனோவதி நகருக்கு வந்து பதும பீடத்து மலர்த்தவிசின் மீது வீற்றிருந்த பிரம்மன் தனது தம்பி மன்மதனை வரவழைத்தான்.

மன்மதன் என்றால் மனத்தினின்று தோன்றியவன் என்பது பொருள். திருமால் மனத்தினின்று தோன்றியவன் மன்மதன். ஆசை தோன்றுமிடம் மனம் தானே!

''தம்பி! தேவர்கள் துயர்தீர நீ போய்ச் சிவபெருமான் மீது தாபம் உண்டாக்குவாய்'' என்று பிரம்மன் உத்தரவிட்டார்.

மன்மதன் பதறிப்போனான். சிவபெருமானின் மோன நிலையை அகற்ற வேண்டும் என்ற சொல்லே மன்மதனின் உள்ளத்தைச்சுட்டுவிட்டது.

''அண்ணலே! எவ்வளவு கொடியோரானாலும் தம்மிடம் வந்துவிட்டால் உய்யும் வழியைச்

சொல்லுவது பெரியோர்க்கு அழகு, ஆனால் அறிவிற் சிறந்த தங்களை நாடி வந்த என்னிடம் தங்களுக்குச் சிறிதும் கருணை இல்லையா? பங்காளியாகிய என்னைத் திரும்பி வராதபடி அனுப்பிவிட்டு நீங்களே தேவலோகத்தை சுகமாக ஆளலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அண்ணா! நான் உலகத்தையெல்லாம்மயக்குவேன். என்னைப் பெற்ற தந்தை நாராயணரையும் பிருந்தையிடம் மையல்கொள்ள மயக்கியிருக்கிறேன். திலோத்தமையைக்கண்டு விரும்பும்படி உங்களையே மயக்கியிருக்கிறேன். இந்திரனை மயக்கி அகலிகை மீது ஆசை கொள்ளச் செய்தேன். அருணன் பெண் வடிவம் எடுத்த போது சூரியனை அந்தப் பெண் மீது ஆசை கொள்ளச் செய்தேன். சந்திரனைத் தாரையின்பால் காமம் கொள்ளச் செய்தேன். புதன் என்ற புதல்வன் தோன்றச் செய்தேன். பல முனிவர்களின் தவ வலிமையை இமைப் பொழுதில் மயக்கி என் வசப்படுத்தினேன். என் கணைக்குத் தப்பியவர்கள் மூவுலகிலும் யாரும் இல்லைதான். ஆனாலும்...சிவபெருமானை- துறவிகளின் தெய்வமான சிவபெருமானை-எனது கணையால் மயக்க முடியாது. ஏன் முடியாது தெரியுமா?

கையும் நகையும் கதிரார் விழியும்
மெய்யும் தழலாம் விமலன் தனையான்
எய்யும் படிசென் றிடின் இவ்வுயிர் கொண்(டு)
உய்யும் திறமும் உளதோ உரையாய்.

''சிவபெருமானின் கையில் நெருப்பு; சிரித்துப் புரமெரித்த அவரது வாயில் நெருப்பு; கண்ணிலும் அக்கினி; அவரது திருமேனி அக்கினி வடிவம். தழலே உருவான சங்கரனை எதிர்த்து உயிருடன் திரும்ப முடியாது! அண்ணா! இந்தச் கரும்பு வில் சிவன் தந்தது; புஷ்ப பாணம் அவன் தந்தது. தீட்டிய மரத்திலா கூர் பார்ப்பது? ஆகவே இந்தக் காரியத்தில் மட்டும் ஏவாதீர்கள்'' என்று பலவாறாகக் கூறினான் மன்மதன்.

மன்மதனின் நிலை கண்ட பிரம்மன் சிறிது வருந்தினான். ''தம்பி! நீ சொன்னவை எல்லாம் உண்மைதான். சிவபெருமானை வெல்ல யாராலும் முடியாது. எனினும் அவரது நல்லருளால் உன் காரியம் இனிது முடியும். நீ இப்பொழுது எம்பெருமானை மயக்கச் செல்வதும் அவன் செயலே,

''செம்மாந்து தற்புகழும் தேவர்குழுவும் மருள
எம்மான் பிறன்போல் இருந்தோர் துரும்புநிறீஇ
அம்மா தன்செய்கை அனைத்துமெனக் காட்டினனே
நம்மாலும் முற்றுஞ் சிலவென்கை நாணன்றோ''

''பாடுதிகழ் பாவை பல்லுயிரும் அல்லனவும்
ஆடல்புரிவிப்பான் அருவுருவாய் நின்றபரன்
நாடில் அவனையன்றி நம்மாலொன் றாகவற்றோ
ஏட இதன் நிலைமை இந்நாளும் ஓர்ந்திலையோ?''

தருக்குற்றுத் தம்மைத் தாமேபுகழ்ந்து கொள்ளுகின்ற தேவருக்கு முன்னே சிவபெருமான் ஒரு யட்சவடிவங் கொண்டு நின்று, ஒரு துரும்பை வைத்தருளினார். அதனை வாயு, வருணன், இந்திரன் முதலிய அனைவராலும்அசைக்க முடியவில்லை. அதனால் அவன் அருள் இன்றி துரும்பும் அசையாது; எல்லாம் அவன் செயலே என்பதைக் காட்டியருளினார். ஆதலால் நம்மால் ஒன்று நிகழும் என்று எண்ணுவது நாணத்துக்கு இடமாகும்.

## இளைஞர்களுக்கு அறிவுரை

**வரதட்சிணை கொடுத்தால்தான் திருமணம் செய்துகொள்ள முடியும் என்று நிபந்தனை விதிக்கும் எந்த இளைஞனும், தான் படித்த படிப்புக்கும் தன்னுடைய தேசத்திற்கும் அவமதிப்பைத் தேடிக்கொடுத்தவன் ஆகிறான்.**

—மகாத்மா காந்தி

அருவாகவும் உருவாகவும் நின்ற சிவபெருமான் பாவையை ஆட்டுவது போல எல்லா உயிர்களையும் உலகங்களையும் ஆட்டுவிக்கின்றான். அப்பரமனுடைய அருளின்றி நம்மால் ஒன்றும் ஆகாது. மன்மதனே! இதனை இன்னும் நீ ஆராயவில்லையோ!

எந்த வகையினாலும், ஒருவன் ஒருவர்க்கு ஒரு உதவியை—தனனால் முடிந்ததனைத் தானே புரிதல் உத்தமம்.

சொன்ன பிறகு புரிதல் மத்திமம். சொல்லியும் பன்முறை மறுத்துத் தாமதித்துப் புரிதல் அதமம்.

''என்னாலும் ஒருதவி யாதொருவன் யார்க்கெனினும்
தன்னால் முடிவதெனில் தானே முடித்தல் தலை
சொன்னால் முடித்தல் இடையாகும் சொல்லுகினும்
பன்னாள் மறுத்துப் புரிதல் கடைப் பான்மையதே'

மன்மதா! தேவர்களின் நன்மைக்காகத்தான் உன்னைப் போகச் சொல்லுகிறேன். நீ போய் சிவபெருமானால் உயிரிழந்தால் அது தேவருக்காகச் செய்த பெரிய தியாகம் அல்லவா? துன்பத்திலாழ்ந்து கிடப்பவர்கள் ''உதவி செய்'' என்று வந்தால் அவர்களின் துயரைப் போக்காமல் தன்னுயிர் பெரிது என்று எண்ணியிருப்பது தருமமாகுமா? விருத்திராசுரனை வதைக்கும் பொருட்டு, ததீசி முனிவர் தம் முதுகெலும்பைத் தந்து உயிரிழந்த செய்தியை நீ கேட்டதில்லையா? பாற்கடலில் வடவாமுகாக்கினி விஷம் வந்தபோது நம்மையெல்லாம்காப்பாற்றுவதற்காக நாராயணன் அந்த விஷத்தின் எதிரில் கணப்பொழுது நின்று தமது வெண்மையான திருமேனியைக் கருமையாக்கிக் கொண்டதை நீ அறிந்ததில்லையா? சூரபதுமனால் தேவர்கள் அனைவரும் வருந்திக் கொண்டிருக்கிறோம், இத்துயரைப் போக்கக் குமரக் கடவுள் தோன்றுவார் என்று சிவபெருமான் கூறியிருக்கிறார். குமரக்கடவுள் அவதாரத்துக்காக நீ பஞ்சபாணங்களுடன் சிவபெருமானிடம் போகத்தான் வேண்டும்'' என்று பிரம்மன் மீண்டும் மீண்டும் தூண்டிக் கூறினார்.

மன்மதன் சிந்தித்தான். பிரம்மனால் அழிவதைவிடச் சிவபெருமானால் அழிந்தாலே உய்வதற்கு மார்க்கம் உண்டு என்ற முடிவுக்குவந்தான்.

''நல்லது அண்ணா! போய்வருகிறேன்....... இல்லை... போகிறேன். ஆனால் திரும்பி வரமாட்டேன்'' என்று கூறிப் புறப்பட்டான்.


(தொடரும்)

முருகப்பெருமான் குடிகொண்டு எழுந்தருளிய முக்கிய பதிகளுள் திருத்தணிகையும் ஒன்றாகும். திருத்தணிகைமலை, சென்னையிலிருந்து பம்பாய் செல்லும் பாதையில் உள்ளது. அரக்கோணத்திலிருந்து வடக்கே சுமார் 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இம்மலைக்குச் செல்வதற்குப் புகைவண்டி வசதியும் பேருந்து வசதியும் உண்டு. திருத்தணிகை புகை வண்டி நிலயத்திலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் இம்மலை அமைந்துள்ளது. சென்னையிலிருந்து திருப்பதி செல்லும் அரசுப் பேருந்து திருத்தணிகை

புலவர் செந்துறைமுத்து

வழியாகச் செல்கின்றது. திருப்பதியில் எழுந்தருளிய திருவேங்கடவனைக் கண்டு வழிபடும் அன்பர்கள், திருத்தணிகை சென்று முருகப் பெருமானையும் கண்டு வழிபட வேண்டியது முறையாகும்.

முருகப்பெருமான் வள்ளி நாயகியை மணம் செய்யும் பொருட்டு வந்து தங்கிய பதி திருத்தணிகை. எம்பெருமான் சூரபதுமன் முதலிய அவுணர்களைப் பொருது வெற்றிகொண்டு, பின்னர்ச் செருத்தணியுமாறு வந்து தங்கிய பதி திருத்தணிகை. திருத்தணிகை மலையும், அதனைச் சார்ந்த பகுதிகளும் 'திருத்தணி' என்றும், 'தணிகை என்றும் வழங்கப்பெறுகின்றது; கந்தபுராண நூலாசிரியர் 'செருத்தணி' என வழங்கியுள்ளார்.





மலர்களில் சிறந்தது தாமரை; நதிகளில் சிறந்தது கங்கை; பதிகளில் சிறந்தது காஞ்சியம் பதி; மலைகளில் சிறந்தது தணிகைமலை என்றும் அழகுமிகக் கந்தபுராண நூலாசிரியர் புகன்றுள்ளார். இதனை,

''விரையி டங்கொளும் போதினுள் மிக்க
பங்கயம்போல்
திரையிட ங்கொளும் நதிகளிற் சிறந்த கங்
கையைப்போல்
தரையி டங்கொளும் பதிகளிற் காஞ்சியந்
தலம்போல்
வரையி டங்களில் சிறந்ததித் தணிகைமால்
வரையே''

என்னும் கந்தபுராணப் பாடலால் அறியலாகும்.

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், தணிகையின் சிறப்பைக் கூறுங்கால்,

''புவிமீதே பிரபலமுள்ள சுத்ததணிமலை''
என்றும்,
''இமையவர் பணிதிருத்தணி பொற்பதி'' என்றும்
''எத்திக்கு முற்ற புகழ் வெள்ளித்திருத்தணி''
என்றும்,
''திரைகடல் சூழும் புவிக்குயிராகும்திருத்தணி''
என்றும் போற்றிக் கூறியுள்ளார்.

தணிகைமலை திருக்கயிலாய மலையைப் போன்ற பெருமை வாய்ந்தது என்றும் கந்தபுராண ஆசிரியர் கூறியுள்ளார். இம்மலைக்குச் சென்று வழிபடுவோர் சிறந்த பேறு பெறுவர் என்றும், தீவினைகள் நீங்கப் பெறுவர் என்றும் கூறுவர். இதற்கேற்ப மக்கள் திரள் திரளாகச் சென்று தணிகைப் பெருமானைக் கண்டு வழிபட்டு செல்வதைக் காண்கின்றோம்.


தணிகைப்பதியின் சிறப்பினை முருகப்பெருமானே வள்ளி நாயகிக்குக் கூறுங்கால், பல குற்றங்களைச் செய்தவராயினும், அவர்கள் அன்போடு தணிகை மலையை வந்து அடைவாரேயானால், பிரம்மனை விடவும், திருமாலை விடவும், பிற சிறந்தோரை விடவும் மேலானவராவார் என்று கூறியுள்ளார். இதனை,

''பாதகம் பல செய்தவ ராயினும் பவங்கள்
ஏதும் கைவலும் புரிபவராயினும் எம்பால்
ஆதரங்கொடு தணிகைவெற் படைவரேல் அவரே
வேதன் மாலினும் விழுமிய ரெவற்றினு மிக்கார்''

என்னும் கந்தபுராணப் பாடலால் அறியலாகும்.

தொண்டை நாட்டு மேற்பாடி என்ற ஊரின் அருகில் வள்ளிமலை என்று ஒரு மலை உண்டு. அம்மலையையும், மலையைச் சார்ந்த பகுதிகளையும் நம்பி என்னும் வேடன் ஆண்டு வந்தான். அந்நம்பிராசன், தன் குலக்கடவுளாகிய முருகப் பெருமானை வழிபட்டு வந்தான்.

அம்மலைப் பகுதியில் ஒரு மான் சூல்கொண்டிருந்தது. அம்மான், அம்மலைப்பக்கத்தில்வள்ளிக் கிழங்கு அகழ்ந்தெடுத்த ஆழ்ந்த ஒரு குழியில் ஒரு குழவியை ஈன்றது. அக்குழவி மானிடக் குழவியாய் இருந்ததைக் கண்ட மான் அவ்விடத்தை விட்டு அஞ்சியோடி விட்டது. அக்குழவி அவ்விடத்திலேயே அழுதவண்ணம் கிடந்தது. அப்போது அப்பகுதியில் வேட்டையாடி நீர் வேட்கையால் அங்கு வந்த நம்பிராசன் அக்குழந்தையைக் கண்டான். அதன் அழகைக் கண்டு மகிழ்ந்த அவன் அக்குழந்தையை எடுத்துத் தன் மனைவியிடம்



**சுப்பிரமணியர் உலாவரும் தங்கத்தேர்**

கொடுத்தான். அவளும் அக்குழந்தையை அன்புடனும் மகிழ்வுடனும் வளர்த்தாள். வள்ளிக்கிழங்கின் பாதங்களில் கிடந்ததால் 'வள்ளி' என்னும் பெயரையும் சூட்டினான்.

வள்ளி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து உரிய பருவத்தையடைந்தாள். வள்ளியின் அழகும் நாளுக்கு நாள் மிகுந்தது. நம்பிராசன் தன் குலமுறைப்படி வள்ளியைத் தினைப்புனக் காவலில் இருத்தினான். வள்ளியும் பரண்மீது இருந்து தினைப்புனம் காத்துக்கொண்டிருந்தாள்.

அப்போது அப்பக்கம் வந்த நாரத முனிவர், வள்ளியின் எழிலைக் கண்டு, இவட்கு ஏற்ற மணாளன் 'கந்தனே' எனக் கருத்திற்கொண்டு, தணிகைக்குச் சென்று முருகப்பெருமானிடம் வள்ளியின் எழிலை எடுத்துக் கூறினார். முருகப்பெருமானும் இவளை மணக்க விரும்பினார்.

வள்ளியை மணந்து கொள்ள விரும்பிய வடிவேற் பெருமான், தம் தெய்வ உருவை விடுத்து

மானுட உருவெடுத்து வேடனாக அத்தினைப்புனம் பக்கம் சென்று வள்ளியைக் கண்டார். வேடனாக வந்த முருகப் பெருமான் வேங்கையாக மாறி முதியவராகி, யானைமுகத்தோன் அருளால் பின்னர் வள்ளி நாயகியை மணந்தார்.

முருகனென அறியாமல் வள்ளியைக் கவர்ந்த வேடுவனுடன் போர்புரிந்த நம்பிராசன், பின்னர் வேடனை முருகனெனத் தெளிந்து தன் குற்றம் பொறுக்க வேண்டினான். முருகப்பெருமான் நம்பிராசன், வள்ளியின் தோழியர் முதலியோர்க்கு அருள் செய்துவிட்டு, வள்ளியுடன் தணிகைமலை வந்து தங்கினார்; தணிகைமலையில் எழுந்தருளித் தம்மை நாடி வரும் அன்பர்கட்குத் திருவருள் புரிந்து வருகின்றார்.

திருத்தணிகை நகரில் நடுவில் சுமார் நானூறு அடிகள் உயரத்தில் தணிகைமலை அமைந்துள்ளது. மலையின் முகட்டில் நான்கு பிரகாரங்களுடன் அழகு மிகுந்த ஆறுமுகப் பெருமானின் திருக்கோயில் அமைந்துள்ளது.

இம்மலையின் இரு மருங்கும் மலைத் தொடர்கள் இருக்கின்றன. வடக்கே உள்ள மலை சற்று வெண்மையாக இருப்பதால், அதனைப் பச்சரிசிமலை என்றும் கூறுவர். தெற்கே உள்ள மலை சற்றுக் கருமையாக இருப்பதால், அதனைப் பிண்ணாக்கு மலை என்று கூறுவர்.

மலையின் அடிவாரத்தில் சரவணப்பொய்கை அமைந்துள்ளது. இப்பொய்கையை முருகப் பெருமான் சிவவழிபாட்டிற்காக வரவழைத்த கங்கா தீர்த்தம் என்றும், இக்காரணத்தால் இதனைக் குமார தீர்த்தம் என்றும் புராண நூல்கள் கூறுகின்றன.


அடிவாரத்திலிருந்து மலை ஏறிச் செல்லும் பாதையில் வடபக்கத்தில் பிரம்மசுனை என்று வழங்கப்பெறும் பிரம்ம தீர்த்தமும், அதன் அருகில் விநாயகர் பிரமலிங்கம் முதலியோர் உள்ள கோயிலும் உள்ளன. இத்தீர்த்தத்தின் அருகில் பிரம்மதேவன் முருகப் பெருமானை வழிபட்டு மீண்டும் படைப்புத் தொழிலைப் பெற்றதாகப் புராணம் கூறுகின்றது.

மலையின் உச்சியை அடைந்ததும் நான்காவது பிரகாரமாகிய இரதவீதியின் கிழக்குப் பாகத்தைக் காணலாம். இப்பாகத்தில் கார்த்திகை தினங்களில் வேண்டுதல் கற்பூரம் எரியும் கற்பூரக் கொப்பரையும், நாள்தோறும் வழிபாட்டுக் காலங்களில் முகமதிய மக்கள் வாத்தியம் வாசிக்கும் நவாப் வாத்திய மண்டபமும் அமைந்துள்ளன. காதர் என்ற நவாப் தனது துன்பத்தை அகற்றியதற்கு அறிகுறியாக இந்த வாத்திய மண்டபத்தையும், தனது பெயரால் பிரசன்ன காதரீசுவரர்என்ற சிவன் கோயிலையும் இக்கோயிலில் அமைத்ததாக வழங்கப்படுகின்றது. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான், வள்ளிமலை சுவாமிகளுக்கு ஒரு முகமதியப் பெரியவர் உருவில்காட்சியளித்ததாகவும் கூறப்படுகின்றது. இந்நான்காவது பிரகாரத்தில் இந்திர நீலச்சுனை என்ற சுனையும் விஷ்ணு தீர்த்தம், நாக தீர்த்தம் என்ற தீர்த்தங்களும் அமைந்துள்ளன.

நான்காவது பிரகாரத்திலிருந்து கிழக்குவாயில் வழியாகச் சில படிகள் ஏறிச் சென்றால் மூன்றாவது பிரகாரத்தை அடையலாம். இம்மூன்றாவது பிரகாரத்தின் கீழ்ப்பாகத்தில் துவஜஸ்தம்ப விநாயகரையும் ஐராவதத்தையும் தெற்குப் பாகத்தில் உமாமகேசுவரர் சன்னதியையும், மேற்கு பாகத்தில் உச்சிப் பிள்ளையார் சன்னதியையும் காணலாம்.

மூன்றாவது பிரகாரத்திலிருந்து இரண்டாவது பிரகாரத்திற்குச் செல்லும் வாயிலின் தென்புறம் பிரசன்ன காதரீசுவரர் சன்னதியும் முகப்பில் காணிக்கை செலுத்துவதற்கான உண்டியலும் அமைந்துள்ளன.

இவ்விரண்டாம் பிரகாரத்தின் தெற்குப் பக்கத்தில் ஏகாம்பரேசுவரச் சன்னதியும், மேற்குப் பக்கத்தில் ஆறுமுகசுவாமி சன்னதியும், வடக்கு பக்கத்தில் முருகனால் வழிபடப் பெற்ற குமரேசுவரலிங்கத்தின் சன்னதியும், தேவயானைக்கு இந்திரன் சீதனமாக அளித்த சந்தனக்கல்லும், உருத்திராக்க விமானத்தில் வீற்றிருக்கும் பெரிய உற்சவ மூர்த்தியின் சன்னதியும் அமைந்துள்ளன.



**இந்திரன் அளித்த சந்தனக்கல்**

பஞ்சாட்சரப் படிகள் என்று வழங்கப்படுகின்ற ஐந்துபடிகள் முதற் பிரகாரத்திற்கு அழைத்துச் செல்கின்றன. தாபன மண்டபம், அர்த்த மண்டபம் முதலியவைகளைக் கடந்து அடையும் முதற் பிரகாரம் கர்ப்பக் கிருகத்தைச் சுற்றிச் செல்கின்றது. இப்பிரகாரத்தின் தென் பகுதியில் வள்ளியம்மன் சன்னதியில் வடக்குப் பகுதியில் தேவயானை சன்னதியும் அமைந்துள்ளன. இப்பிரகாரத்தின் மேற்குப் பகுதியில் பால சுப்பிரமணியர் சன்னதியும், வடக்குப் பகுதியில் சண்டேசுவரர், பைரவர் முதலியோர் சன்னதிகளும் உள்ளன.

கர்ப்பக்கிருகத்தில் திருத்தணிகைப் பெருமானாகிய முருகன், சுந்தரவடிவினராய் இடக்கரத்தைத் தொடையில் அமைத்து வலக்கரத்தில் வேலினைத் தாங்கித் தனித்து நின்று அன்பர்கட்குக் காட்சியளிக்கின்றார்.

சாத்திரங்களில் கூறப்பெற்றுள்ள முருகப் பெருமானின் பதினாறு வகைத் திருவுருவங்களில், தணிகைப் பெருமானின் திருவுருவம் 'ஞானசக்தீதரர்' என்னும் திருவுருவம் என்று கூறப்பெற்றுள்ளது.

மங்களம் தணிகாசலா!
　　மங்களம் பக்தவத்சலா!
மங்களம் சத்தியத்தனே!
　　மங்களம் சுத்த நித்தனே'
மங்களம் புவனேசனே!
　　மங்களம் பவநாசனே!
மங்களம் வள்ளி நாயகா!
　　மங்களம் சுபமங்களம்!

—தணிகாசலப்புராணம்

# ராமனின் இச்சை



இராமகிருஷ்ணப் பரமஹம்சர்

ஒரு கிராமத்திலே ஒரு நெசவாளி இருந்தான். அவன் உண்மையிலேயே பரம பக்தன். ஆகவே ஊர் மக்கள் அனைவரும் அவன் மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள். உண்மையான அன்பையும் செலுத்தினார்கள்.

அந்த நெசவாளி, தான் நெய்த துணிகளைச் சந்தையிலே கொண்டுபோய் விற்பது வழக்கம். துணியை வாங்க வரும் வாடிக்கைக்காரர் யாராவது, ''இந்தத் துணியின் விலை என்ன?'' என்று கேட்டால் அந்த நெசவாளி, இராமபிரானின் இச்சைப்படி விலை ஒரு ரூபாய். ராமபிரானின் இச்சைப்படி நெசவுக்கூலி நாலணா. ராமபிரானின் இச்சைப்படி லாபம் இரண்டனா. ராமபிரானின் இச்சைப்படி ஆக மொத்தம் இந்தத் துணியின் விலை ஒரு ரூபாய் ஆறணா'' என்று நெசவாளி பதில்சொல்லுவான். அந்த நெசவாளி நாணயமானவன் என்பதில் மக்களுக்குப் பரிபூரண நம்பிக்கை இருந்தது. ஆதலால் அவர்கள் நெசவாளி விலையைச் சொன்னவுடனே மறுபேச்சில்லாமல் அவன் சொன்ன விலையைக் கொடுத்து துணியை வாங்கிக் கொள்வார்கள்.

நெசவாளி நேர்மையான வாழ்க்கையையும், பகவானிடம் அபாரமான பக்தியையும் கொண்டவன். இரவுச் சாப்பாட்டிற்குப் பிறகும் அவன், நீண்ட நேரம் தன் வீட்டுப் பூஜையறையில் உட்கார்ந்திருப்பான். அங்கே பகவத் தியானத்திலும் ஜபத்திலும் பக்திப் பாடல்களைப் பாடுவதிலுமாக இரவு நீண்ட நேரம் மனம் தோய்ந்திருப்பதை அவன் வழக்கமாகக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் இரவு நீண்ட நேரம் ஆகியும் நெசவாளிக்கு ஏனோ தூக்கம் வரவில்லை. ஆகவே திண்ணையில் தனியாக உட்கார்ந்து இடையிடையே புகை குடித்துக் கொண்டு ஜபமும் தியானமும் செய்வதில் அவன் ஈடுபட்டிருந்தான். அப்போது அந்த வழியாக ஒரு கொள்ளைக்காரர் கூட்டம் வந்தது. அவர்களுக்கு மூட்டைகளைச் சுமந்துவர ஓர் ஆள் தேவைப்பட்டது. ஆகவே அவர்கள் நெசவாளியைப் பார்த்ததும் ''எங்களுடன் வா'' என்று சொல்லிக் கொண்டே அவனுடைய கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனார்கள்.

பிறகு, திருடர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு வீட்டில் நுழைந்தார்கள். அந்த வீட்டிலிருந்த பல சாமான்களையும் திருடர் கூட்டம் தாராளமாக கொள்ளை யடித்தது. பின்பு கொள்ளையடித்த பொருள்களைத் தூக்கிப் போவதற்கு வசதியாக ஒரு பெரியமூட்டையாகக் கட்டினார்கள். அந்த மூட்டையை நெசவாளியின் தலைமேல் வைத்து, அதைச் சுமந்து வரும்படி கட்டளையிட்டார்கள். அப்பாவி நெசவாளி இப்போது மூட்டையை சுமந்து கொண்டு திருடர்களுடன் போக வேண்டியதாயிற்று.

கொள்ளைக் கூட்டம் தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தது. அப்போது திடீரென்று வழியில் ஒரு போலீஸ்படையே வந்து விட்டது. அவ்வளவுதான், கொள்ளைக்காரர்கள் 'அடித்தோம், பிடித்தோம்' என்று பஞ்சாய்ப் பறந்து ஓடி விட்டார்கள். மூட்டையை சுமந்து வந்த நெசவாளி மட்டும் போலீஸ்காரர்களிடம் மாட்டிக் கொண்டார். போலீஸார் நெசவாளியை அவன் மூட்டையை தலையில் வைத்திருந்த நிலையில் கைது செய்தனர். அவனைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அன்றைய இரவு முழுதும் காவலில் வைத்தார்கள்.

மறுநாள் காலை போலீஸார் மாஜிஸ்ட்ரேட் முன்பு நெசவாளியை விசாரணைக்காகக் கொண்டு போய் நிறுத்தினர். இதற்குள்ளாக ஊரில் இருப்பவர்களுக்கு விவரம் தெரிய வந்தது. உடனே பரப்புடன் ஊரே மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு வந்து கூடி விட்டது. 'நம் நெசவாளிக்கு இப்படிப் பட்ட நிலை வந்ததே' என்று நினைத்து மக்கள் மனம் பெரிதும் புண்பட்டது. ஊர் மக்கள் மாஜிஸ்டிரேட்டைப் பார்த்து, 'ஐயா, இந்த நெசவாளி ஒருபோதும் திருடியிருக்க மாட்டான்' என்று ஒருமனதாக ஏகோபித்துச் சொன்னார்கள்.

இப்படி ஊர் மக்களே கூட்டமாகத் திரண்டு வந்து ஒருவனுக்காகப் பரிந்து பேசியதைக் மாஜிஸ்டிரேட் கேட்டார். அவர் நெசவாளியைப் பார்த்து, ''என்ன நடந்தது? சொல்'' என்று கேட்டுவிட்டு விசாரணையைத் துவக்கினார்.



நெசவாளி அதற்குப் பதிலாகப் பின்வருமாறு வாக்குமூலம் கொடுத்தான்; ''ஐயா, ராமபிரானின் இச்சைப்படி நான் இரவுச் சாப்பாட்டை முடித்தேன். பிறகு ராமபிரானின் இச்சைப்படி வழக்கம் போல் பூஜையறையில் உட்கார்ந்திருந்தேன். ராமபிரானின் இச்சைப்படி அப்போது இரவு வெகு நேரம் ஆயிற்று. ராமபிரானின் இச்சைப்படி பகவத் தியானமும் ஜபமும் பஜனையும் செய்து கொண்டிருந்தேன். ராமபிரானின் இச்சைப்படி பிறகு திண்ணையில் உட்கார்ந்து அவரையே நினைத்துப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். ராமபிரானின் இச்சைப்படி அப்போது அந்த வழியாக ஒரு கொள்ளைக் கூட்டம் செல்ல நேர்ந்தது. ராம பிரானின் இச்சைப்படி அவர்கள் என்னையும் தங்களோடு வரச்சொல்லி இழுத்துக்கொண்டு போனார்கள். ராமபிரானின் இச்சைப்படி அவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு வீட்டில் கொள்ளையடித்தார்கள். ராமனின் இச்சைப்படியே கொள்ளையடித்த பொருள்களை ஒரு மூட்டையாகக் கட்டி என் தலைமேல் வைத்தார்கள். ராமனின் இச்சைப்படி அவர்கள் அந்த முட்டையைத் தூக்கி வரும்படி கட்டளையிட்டார்கள். ராமனின் இச்சைப்படி அப்போது போலீஸ்காரர்கள் வந்து விட்டார்கள். ராமனின் இச்சைப்படி திருடர் கூட்டம் ஓடிப்போக, ராமனின் இச்சைப்படி நான் கைதியாக்கப்பட்டேன். ராமனின் இச்சைப்படி போலீசார் என்னைக் காவல் நிலையத்திற்கு அழைத்துப்போய் அங்கே ஓர் இரவு காவலில் வைத்தார்கள். ராமனின் இச்சைப்படி இப்போது போலீசாரால் தங்கள் முன்பு கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கிறேன்''.

மாஜிஸ்டிரேட் நெசவாளியின் வாக்குமூலத்தைக் கவனமாகக் கேட்டார். அவருக்கு நெசவாளி உண்மையிலேயே ஒரு பெரிய பக்தன் என்பது புரிந்து விட்டது. நெசவாளியின் பக்தியையும் நேர்மையையும் மனதில் கொண்ட மாஜிஸ்ட்ரேட், உடனே நெசவாளியை விடுதலை செய்யும்படி உத்தரவிட்டார்.

நெசவாளி வீட்டுக்குப் போகும் வழியில் தன் நண்பர்களிடம் ''இராமபிரானின் இச்சைப்படி என்னை விடுதலை செய்து விட்டார்கள்'' என்று சொன்னான்.

நீ குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு இல்லறத்தவனாக இருப்பதோ, குடும்ப வாழ்க்கையைத் துறந்து உயர்ந்த சந்நியாசியாக இருப்பதோ உண்மையில் இராமபிரானின் இச்சையையே பொறுத்திருக்கிறது. எனவே, இதை நீ புரிந்து கொண்டு உன் ஒவ்வொரு செயலையும் பகவானிடமே ஒப்படைத்துவிடு. எல்லாப் பாரத்தையும் இறைவன் மீது போட்டு விட்டு உலகில் உனக்கு ஏற்பட்டுள்ள கடமைகளை முறையாக செய். அதைத் தவிர வேறு என்ன நீ செய்ய இருக்கிறது?

— — — —



# செப்புத் திருமேனிகள்

நடன. காசிநாதன்

தமிழகத்துக்குத் தனிப்பெருமையைத் தேடித் தரும் பல்வகைக் கலைச் சிறப்புக்களுள்ளே செப்புத் திருமேனிக்கலை உலகப் புகழை ஈட்டித்தரும் உன்னதக் கலையாகும். இதைப் 'படிமக்கலை' என்றும் பகர்வர் கலை வல்லார்.

தமிழகத்தைப் பொருத்தவரையில் இக்கலை உருவான நோக்கம், கடவுளர் உருவங்களை வீதியுலா எடுத்துச்செல்வதற்கும், சிறு அளவில் செய்து வீட்டில் வழிபடுவதற்கும் ஏற்பட்டவை என்று கருதப்படுகிறது. தமிழ் நாட்டில் கோயில்கள் பெருகப் பெருக இக்கலையும் பெரும் அளவில் வளர்ந்தது.


செப்புப் படிமத்தில் இருவகை காணப்படுகிறது. கனமாக இருப்பவை (Solid) மற்றொன்று பொள்ளலாக (Hallow) இருப்பவை. வழிபடும் தெய்வங்களின் திருமேனிகள் அனைத்தும் பெரும்பாலும் கனமாகச் செய்யப்படும். தெய்வங்களின் வாகனங்கள் பொள்ளலாகச் செய்யப்பட்டிருக்கும். இவைகளைக் கனமாகச் செய்தால் வீதியுலாவில் தூக்கிச் செல்லுதலும் கடினம், அத்தோடு அவை செய்வதற்கு அதிகஅளவில் உலோகக் கலவை தேவைப்படும்.

கனமாக இருக்கக்கூடிய செப்புத் திருமேனிகளைச் செய்கின்ற முறைக்கு ( Cire Perdue ) அல்லது Lost wex (மெழுகு இழப்பு) முறை என்றும் பொள்ளலாகச் செய்பவற்றை களிமண் உடைப்பு முறை என்றும் கூறுவர். மெழுகு இழப்பு முறையை சமஸ்கிருதம் '' மதுச்சிஸ்டவிதனா '' என்று கூறும்.


மெழுகினால் படிமத்தைச் செய்து அதனை மண்பூச்சுக்களால் கவசமாகமூடி அது நன்றாகக் காய்ந்தபின் அதைச் சுட்டு மெழுகை உருக்கி, வெளியேற்றி, உள்ளீடற்ற மண், அதாவது கரு தயாரிக்கப்படுகிறது. உரிய உலோகங்களைக் கலந்து உருக்கி அக்கருவிக்குள் ஊற்றி அவ்வுலோகம் ஆறியபின் மண் கருவை நீக்கி உலோகப் படிமம் வெளிக்கொணரப்படுகிறது. இதற்கு மெழுகு இழப்பு முறை என்று பெயர். இம்முறையை ஐந்து நிலையாகப் பிரிப்பர். 1) மெழுகு பிடித்தல், 2) கருக்கட்டுதல், 3) வார்த்தல், 4) வெட்டிராவிச் சீவுதல், 5) தீர்மானம் செய்தல் ஆகியவையாகும்.

படிமத்தை மண்ணால் செய்து அதன்மீது தகடுபோல் மெழுகை, எங்கணும் ஒட்டி, அதன் மீது பூச்சுமண் ஆகியவற்றை முன்போல் கட்டியமைத்து, இடையிலுள்ள மெழுகை உருக்கி வெளியேற்றி உள்ளீடற்ற மண் கரு தயாரிக்கப்படுகிறது. இங்ஙனம் கிடைத்த கருவின் உள்கூட்டில் உலோகத்திரவத்தை ஊற்றி முன்போல் கூட்டை உறைத்துப் படிமம் வெளியே கொண்டுவரப்படுகிறது. இதற்குக் களிமண் கட்டு உடைப்புமுறை என்று பெயர்.

செப்புப்படிமக்கலை கல் உருவக் கலையை விடப் பழமையானது என்று கூறலாம். பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் மண்டகப்பட்டு கல் வெட்டிலிருந்து கல்லால் கோயில் அமைத்து கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் அதிக அள



வில் தொடங்கப்பெற்றதாகத் தெரிகிறது. கல்லில் உருவம் செதுக்கும் கலை மகேந்திரவர்மன் காலத்துக்கு முன்பாகவே இருந்திருத்தல் வேண்டும். நடுகற்களின் உருவங்களைக் கொண்டே நாம் அதைக் காண முடியும், கல்லில் உருவம் செதுக்குதல் **PanelSculptures** என்பது வேறு. கல்லால் உருவம் சமைத்தல் **(Figure in round)** அல்லது செய்தல் என்பது வேறு. கல்லால் உருவம் செய்யும் கலை பல்லவர் காலத்தில் தோன்றியிருக்கலாம். கல்லில் உருவம் அமைப்பதற்கு முன்பாக சுதையாலும், மரத்தாலுமே உருவங்கள் செய்யப்பட்டன. அந்தச் சமயத்தில் நிலைத்த பொருளான செம்பினால் உருவம் செய்திருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் கி. மு 7-அல்லது 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த செப்புச் சிலைகளை நாம் ஆதிச்சநல்லூரிலிருந்து கண்டெடுக்க முடிந்திருக்கிறது. மொஹஞ்சதாரோவில் கிடைத்துள்ள நாட்டிய மகளின் உருவமும் இதற்குச் சான்றாக நிற்கிறது.



உலகளந்த பெருமானின் படிமம்

தொடக்க காலத்தில் செய்யப்பெற்ற செப்பு உருவங்கள் வெறும் வழி பாட்டுக்கு மட்டும் செய்யப்பெற்றவையாக இருக்கும். நாளாக ஆக வழி பாட்டு முறையில் பல சடங்குகள் ஏற்பட்டவுடன் செப்புப்படிமங்கள் வீதியுலாவிற்கு எடுத்துச் செல்வதற்காகவும் அமைக்கப்பட்டன.


பிற்காலங்களில் ஆலயங்களில் நித்ய விழாக்களும் பருவ விழாக்களும், ஆண்டு விழாக்களும் அதிகரித்தன. அத்தகைய விழாக்களில் என்னென்ன திருவுருவங்கள் வீதியுலா எடுத்துச் செல்லப்படுதல் வேண்டும் என்றெல்லாம் வரன்முறைப்படுத்தப் பட்டுள்ளன. நித்ய உத்சவங்களில் விநாயகர்,சிவன், தேவி (அம்மன்), பாசுபத மூர்த்தி, அஸ்திரதேவர், கோலகலிங்கம், ஸ்கந்தர், விருஷராஜர் மற்றும் சண்டேசர் ஆகிய திருவுருவங்களை வீதியுலா எடுத்துச் செல்லுதல் வேண்டும் என்று ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. வைணவ ஆகமங்கள் அர்ச்சா மூர்த்தி என்று செப்புப்படிமங்களைக் குறிப்பிடுகின்றன. அர்ச்சாமூர்த்தி படிமங்கள் ஐந்துவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை 1) கர்ம படிமங்கள், 2) உத்சவப்படிமங்கள், 3) பலிபடிமங்கள், 4) ஸ்நாந படிமங்கள் 5) சயனபடிமங்கள். கர்ம படிமங்கள் நித்ய வழிபாட்டுக்கும், உத்சவ படிமங்கள் விழாக்களுக்கும், பலிபடிமங்கள் பலி வழங்குதலுக்கும், ஸ்நாநபடிமங்கள், நீராட்டலுக்கும், சயனபடிமங்கள் பள்ளி அறைக்குமாகப் பயன்படுத்தப்படும். வைணவ ஆலயங்களில் மூல விக்கிரகத்தோடு சில செப்புத்திருமேனிகளும், உண்ணாழியில் வைக்கப் பெற்றிருக்கும். அவைகளுக்குக் கௌத்துவ பேரம் என்று பெயர். இவ்விக்கிரகங்களுக்கு, நித்திய வழிபாடு நடைபெறும். ஆண்டு உத்சவங்களின் போது இவைகள் வீதியுலாவுக்கும் எடுத்துச் செல்லப்படும். செப்புத்திருமேனிகள் எதற்காகச் செய்யப்பட்டன என்பதையும் எவ்வாறு செய்யப்பெறறன என்பதையும் இதுவரை கண்டோம்.

***

## தேய்வ வழிபாட்டின் அவசியம்

*ஒரு கானகத்தில் விலங்குகளின் மாநாடு நடைபெற்றது. அதில் தலைமை தாங்கிய சிங்கம் "விலங்குத் தோழர்களே! உயிர் வாழ்க்கைக்கு ஆடை அவசியமா? மனிதர்கள் ஆடைக்கு அவசியமின்றி அதிகம் செலவழிப்பது அறிவின்மையாகும். அது வருந்தத்தக்கது" என்று கூறிற்று. அதைப்போல மனித வாழ்க்கைக்குக் கடவுள் வணக்கம் தேவையா? நாங்கள் கடவுளை வணங்காமல் வாழவில்லையா என்று வினவுவார்கள். மானம் உள்ளவன் ஆடை உடுப்பான். மனம் உள்ளவன் இறைவனை வணங்குவான்.*

—திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்




**அருட்செல்வி**

தமிழ்மக்களால் சிறப்பாகப் போற்றப்படும் நாட்களில் தைப்பூசம் ஒன்று. திருஞானசம்பந்தர் தம் திருமயிலைப் பதிகத்தில்

''மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலை
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசு வொண்புழுக்கல் நேரிழையார்
கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பா
வாய்''

எனப் பாடியிருப்பதால், **1300** ஆண்டுகளுக்கு முன்னமே தமிழகத்தில் தைப்பூச விழா சிறந்திருந்தமையை அறியலாம்.

தைப்பூசத் திருநாளில் ஆலயங்களில் தெப்போற்சவத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. தைப்பூச நாளிற் தெப்போற்சவம் நடத்துவதால் உலகம் செழிப்புப் பெறும் என்று நம்பப்படுகிறது. தேவர்களும் தேவரிசிகளும் கூட பூலோகம் வந்து தைப் பூச நன்னாளில் புனலாடித் தெப்போற்சவத்தையும் கண்டு மகிழ்வர். இத் தைப் பூசப் புனலாடுதலின் சிறப்பினைத்திருஞானசம்பந்தர்

''பூசம் புகுந்தாடிப் பொலிந்து அழகாய
ஈசன் உறைகின்ற இடைமரு தீதோ''

''வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர்
வந்தீண்டிப்
பொருந்தியத் தைப்பூச மாடி உலகம் பொலி
வெய்த''

என்று போற்றிப் பாடியிருக்கிறார்.

திருநாவுக்கரசரும்,

''பாசம் ஒன்றிலராய் பலபக்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈசனெம் பெருமான் இடை மருதினில்
பூச நாம் புகுதும் புனலாடவே''

என்று தைப்பூசப் புனலாடலைப் போற்றியிருக்கிறார்.

தைப்பூசத் திருநாளை ஒட்டித் தெப்பத்திருவிழா நிகழ்த்துவது சிவாலயங்களில் பெரிதும் வழக்கமாய் இருந்து வருவதன் தத்துவத்தையும் நாம் தெளிந்து கொள்வது அவசியமாகும். பிறவியாகிய கடலில் நாம் சிக்கித் தவித்து வாடுகிறோம்.

''பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்''

என்பது மணிமேகலை. பிறவியாகிய கடலைக் கடக்கவேண்டுமானால் இறைவன் திருவடியாகிய தெப்பத்தில் ஏறிக்கொள்ள வேண்டும் என்பதைத் திருவள்ளுவர்

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்''

என்ற குறளில் உணர்த்தி யிருக்கின்றார்.

இறைவர் திருவடியாகிய தெப்பத்தைப் பற்றிக் கொள்ளாவிடில் மாணிக்க வாசகர் தம் திருவாசகத்தில் பாடியுள்ளபடி

''புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எலலாப் பிறப்பும் பிறந்து''

வாட வேண்டியது தான். பட்டினத்தாரும் பாடியுள்ளபடி

''அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பின்னை எத்தனை எத்தனைப் பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனைப் பிள்ளையோ
முன்னம் எத்தனை எத்தனைச் சென்மமோ
மூடனாய் அடியேன் ஒன்றும் அறிந்திலேன்
இன்னும் எத்தனை எத்தனைச் சென்மமோ
என்செய்வேன் கச்சி ஏகம்ப நாதனே''

என்றும் பாடி உழலவேண்டியதுதான்.

இப்படி உழலாமல் வாடாமல் வருந்தாமல் நோகாமல் துடிக்காமல் முத்தியின்பம் பெற வேண்டுமானால் இறைவன் திருவடியாகிய தெப்பத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்திடும் பொருட்டே தைப்பூச நன்னாளில், தெப்போற்சவங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன என்பதை நாம் தெளிந்து கொள்ளவேண்டும். மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் ஒரு வாசகம் இக்கருத்தை இவ்விதமே தெளிவுபடுத்துகிறது. அப்பொன்வாசகம் வருமாறு:



''மருவினிய மலர்ப் பாதம்
மனத்தில் வளர்ந்து உள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச்
சிவபெருமான் என்றேத்திப்
பெருகிய நின் பரங் கருணைத்
தடங்கடலில் படிவாமாறு
அருள்எனக் கிங்கு இடைமருதே
இடங் கொண்ட அம்மானே''

தைப்பூச நன்னாளில் தெப்பவிழாக்களை நிகழ்த்தி ஈசருடைய திருவடிகளைச் சிக்கெனப் பிடித்துக் கொள்வோம்.

# நாம் ஒரு சிந்தனை





ம. சூரியராஜ், இணை ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600 034.

இந்தப் பிரபஞ்சத்தில் நாம் யார் என சிந்தித்தால், ஒரு பிரம்மாண்டமான மண்டலத்தில் ஒரு தூசி அளவில் இருப்பதை உணருகிறோம். பிரபஞ்சத்தின் உற்பத்தி, அதன் வளர்ச்சி, அதன் முடிவு, இதற்கான காலத்தைக்கணக்கிட்டால் ஒரு மனிதன் வாழும் காலம் அதில் கோடான கோடியிலும் ஒரு சிறு துகள் பகுதிகூட இல்லாதது என்பதையும் அறிகின்றோம். இப்படிப்பட்ட ஒரு சிறு துளியாகக் கருதப்படும் நாம் நம்மைப் பற்றி எப்படி எல்லாம் நினைத்துக் கொள்கிறோம். நம்மிலுள்ள அகங்காரம், ஆணவம் எவ்வளவு பெரிதாக இருக்கின்றது. இப்படிப் பெரிதாக நினைத்துச் செயல்படும் நாம் நம்மைக் கட்டுப்படுத்துகின்ற நிலையில் இருக்கின்றோமா? நம்மை நாமே கட்டுப்படுத்த இயல்கிறதா? அதுவும் இயலவில்லை.

நம் இதயம் தினமும் லட்சக்கணக்கான தடவை சுருங்கி விரிந்து செயல்படுவதை உணர்கின்றோம். அதை நம்மால் கட்டுப்படுத்தவோ, இயக்கவோ அல்லது நினைத்தால் நிறுத்தவோகூட முடிவதில்லையே. தினமும் பல ஆயிரக்கணக்கான முறை சுவாசித்துப் பயன் பெறுகிறோம். அதையும் நம்மால் கட்டுப்படுத்த முடிவதில்லை. நம் உடம்பில் தினமும் நூற்றுக்கணக்கான மைல்கள் நம் இரத்தம் சுற்றி வந்த போதிலும் நம் உணர்வின்றியே அது செயல்படுகின்றது. ஒவ்வொரு மணித்துளியிலும் நம் இரத்தத்தில் பல லட்சம் உயிர் அணுக்கள் உற்பத்தி ஆகி நமக்கு உறுதுணையாக இருந்து அழிந்து பட்டாலும் நம்மால் அதை உணர முடிவதில்லை. நம் தசையில் ஓயாது லட்சக் கணக்கில் திசுக்கள் வளர்வதும் கழிவதும் நம்மைக் கேட்டா நடக்கின்றது? குழந்தையாகப் பிறந்தது முதல் உடல் வளர்கிறது. அதை நம்மால் கூட்டவோ, குறைக்கவோ முடிவதில்லையே. உடல் வளர்ச்சி குன்றி வருந்தும் மாந்தர்கள் எத்தனைப் பேர்? அவர்கள் தங்களையும் மற்ற மனிதர்களைப் போல் வளர்த்துக் கொள்ள முடிகின்றதா? தினமும் நம்மைத் தாக்கும் லட்சக்கணக்கான நுண்கிருமிகளால் நம் உடல் வேதனை அடைந்தாலும் அப்படித் தாக்குவதை நம்மால் தடுக்க முடிகின்றதா? இல்லை உணரத்தான் முடிகின்றதா?

நம் உடலில்தான் எத்தனை விதமான திரவங்கள், எத்தனை விதமான சுரப்பிகள் மூலம் உற்பத்தி ஆகிக்கொண்டே இருக்கிறது? அதை நம்மால் வேண்டிய பொழுது வேண்டும் அளவில் கூட்டவோ, குறைக்கவோ இயல்வதில்லையே. கண்ணிலிருந்து வரும் கண்ணீரைக்கூட அது ஆனந்த கண்ணீர் ஆனாலும் சரி, அல்லது அவலக் கண்ணீர் ஆனாலும் சரி, கட்டுப்படுத்த முடிவதில்லையே. அத்தனை உறுப்புக்களும் நாம் நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் நாம் விழித்திருந்தாலும், தூங்கினாலும் தங்குதடையின்றி நம் கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல் எவ்வளவு அற்புதமாகச் செயல்படுகிறது.

இந்த நம் உடம்பு ஒரு நிலையில் நிற்கின்றது போல்தோன்றினாலும் அது மணிக்குப் பல ஆயிரம் மைல் வேகத்தில் பூமியின் சுழற்சியோடு நகர்ந்து கொண்டு இருக்கின்றதையாவது உணர முடிகின்றதா? இல்லையே.

நம் உடம்பில் எதையும் கட்டுப்படுத்த இயலாத நாம் நம் உள்ளத்தையாவது கட்டுப்படுத்த முடிகின்றதா? நம் நினைவுகள்தான் எத்துணை வேகத்தில் எங்கெங்கோ சென்று திரும்புகின்றதே. நம் ஆசைகள்தான் எத்தனை வகை! அவைகளின் வளர்ச்சிதான் எத்தனை வேகத்தில் உள்ளது. ஆசைகள், நல்லனவாக இருந்தாலும் அல்லது தீயனவாக இருந்தாலும் அதுவும் நம் கட்டுப்பாட்டில் இல்லையே! எதையும் கட்டுப்படுத்த முடியாத நாம் கட்டுப்படுத்த கூடியவைகளையாவது கட்டுப்படுத்திப் பயன்பெற முயற்சிக்கின்றோமா? அதிலும் ஆர்வம் காட்டுவதில்லை. உணவைக் கட்டுப்படுத்தி உடல் நலம் பேணலாம் என்றாலும் எவ்வளவு பேர் இதில் கட்டுப்பாடுடன் செயல்படுகின்றார்கள். உணவைப் பெருக்கி உடலையும் கெடுக்கின்றோம்.

''நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்''

—அப்பர்.

வளர்க்க வேண்டிய நல் உணர்வுகளை வளர்க்காமல் கட்டுப்படுத்த வேண்டிய தேவையற்ற உணர்வுகளை வளர விட்டுப்பின் துயருறுவதில்லையா? நல்ல உள்ளம் பெறுவதற்கு வழிதான் என்ன? நம் சிந்தனையை ஒழுங்குபடுத்துவது ஒன்றுதான் வழி. நம் சிந்தனைக்கு ஏற்பதான் நம் வாழ்வு அமையும். நற்சிந்தனை, நல்வழியில் நடத்தும். நமக்காக மட்டும் சிந்திக்காமல் பிறர் நலனுக்கும் சிந்திக்க வேண்டும். பிறர் நலனுக்காக சில சுயநலன்களைத் தியாகம் செய்வதில் ஏற்படும் மகிழ்ச்சி வேறு எதிலும் கிடைக்காது. இறைவன் கருணையை நினைத்து செயல்படத் தொடங்கினாலும், தியாக உணர்வை வளர்த்துக் கொண்டாலும், பிறர் நலம் பேணுவதில் பெரிதும் வெற்றி பெறலாம். அன்பைப் பெருக்கி அமைதியை வளர்த்தால் வாழ்வில் வெற்றி பெறலாமே. இப்படி வளர்க்க வேண்டியவைகளை வளர்த்தும் கட்டுப்படுத்த வேண்டியவைகளைக் கட்டுப்படுத்தியும் வாழ்வதற்கு துணையாகநிற்பது எது? இத்தனையும் கடந்த ஒரு சக்திதானே இதற்கும் துணையாகநிற்கமுடியும். அந்தச் சக்தியை பார்க்க இயலாவிட்டாலும் உணர இயலும் என்று அறிஞர்கள் முதல் ஞானிகள்வரை போதித்துள்ளார்களே!

தன்னை அறிந்தால் தலைவன்மேல் பற்றலது
பின்னையொரு பற்றும் உண்டோ பேசாய்
பராபரமே!

—தாயுமானவர்.


வாழ்கின்றகாலம் எவ்வளவு ஆனாலும் அதைப் பயனுள்ளதாக்க, தன்னை அறிவதும், பிறர் நலம் நாடுவதும், ஒப்புவமை இல்லா அந்த இறைவன் மேல் மாத்திரம் பற்றுதலை வளர்த்து உள்ளொளி பெருக்கி

ஆங்காரம் என்னுமத
யானைவா யில்கரும்பாய்

ஏங்காமல் எந்தையருள்
எய்துநாள் எந்நாளோ?

என்ற தாயுமானவர் சொல்லுக்கு இலக்கணமாய் நாம் வாழ முயல்வதுதான் நமது கடமை. சிந்திப்போமா? செயல்படுவோமா?

---




## வள்ளலார் உள்ளம் நமக்கும் வரட்டும்

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ திரந்தும் பசியால் அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்து கின்றோர்என்
நேருறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்
சிளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்.

# பலன் தரும் திருமுறைகள்





நா. இராமமூர்த்தி

ஓம் நமசிவாய !

(சுகப்பிரசவத்திற்கும், இரட்டை குழந்தைப் பிரசவம் சிக்கலில்லாமல் பிறக்கவும், அறுவை சிகிச்சையின்றியும் இடர்கள் இல்லாமல் குழந்தை பிறக்கவும் பாராயணம் செய்ய வேண்டிய பதிகங்கள்):—

திருச்சிராப்பள்ளி காவிரி ஆற்றிற்கு தென் கரையிலுள்ள சிவஸ்தலம். சிறப்பான வரலாற்றை உடையது. திரிசிரன் என்று மூன்றுதலை அசுரன் பூசித்த தலம். சுமார் 500 அடி உயரத்தில் அமைந்துள்ள மலை மேல் உள்ள கோயில். அதற்கு மேல் சுமார் 200 அடி உயரத்தில் உச்சி பிள்ளையார் மலைக்கோயில் உள்ளது.

காவிரி வடகரையிலுள்ள ஒரு கிராமத்தில் சிவ நேய செல்வர்கள் குடும்பத்தில் வந்த பெண் ஒருத்தி பிரசவ காலத்தில் பக்கத்தில் யாரும் துணையின்றி ஈஸ்வரனை தியானித்துக் காப்பாற்றுமாறு வேண்டிய போது, இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பரமேஸ்வரன் அந்த பெண்ணுக்குத் தாய்போல் வந்து காவிரியைக் கடந்து அத்தப் பக்கம் போய் அவளுக்கு மருத்துவம் செய்து சுகப்பிரசவமாக அருளினார் என்பது வரலாறு. ஆகவேதான் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுவாமிக்கு தாயுமானார் என்பது திருநாமம். அம்பாள் பெயர் மட்டுவார் குழலி. தாயுமானவர் இப்பதியில் வாழ்ந்தவர். செவ்வந்திப்புராணம் என்ற தல புராணம் சைவ எல்லப்ப நாவலர் பாடியுள்ளார்.

திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் இத்தலத்திற்கு எழுந்தருளி ஒவ்வொருவரும் ஒரு பதிகம் பாடியுள்ளனர். அதில் திருநாவுக்கரசர் பாடிய பதிகத்தில் 4 பாடல்களே கிடைத்துள்ளன. இந்த இரண்டு பதிகங்களையும், உள்ளன்போடு, முழு நம்பிக்கையோடு, பக்திச்சிரத்தையுடன் கர்ப்பிணிப் பெண்களுக்காக,'அவர்களோ அவர்களைச் சார்ந்தவர்களோ ஓதினால், மேற்கூறியவாறு சுகப்பிரசவம் நிச்சயம்.

அடியேனுடைய இரண்டாவது மகள் சம்யுக்தாவிற்கு 1983-ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. 1984 டிசம்பர் மாதம் அவளுக்குப் பிரசவ காலம். 31-க்கு மேல் வயதாகிவிட்டதாலும் உடல் மெலிவாக இருந்ததாலும், அவளைப் பத்து நாட்களுக்கு முன்பே ஹெல்த் சென்டரில் சேர்த்து விட்டோம். அங்குள்ள டாக்டர்கள் பார்த்து பிரசவம் மிகவும் சிரமப்படும்போல் இருக்கிறது என்று கவலை தெரிவித்தார்கள். இரண்டு நாட்களுக்கு முன் தொலைபேசி மூலம் ''உங்கள் மகளை சென்னை எழும்பூர் பெரிய ஆஸ்பத்திரியில் அழைத்துப்போய் சேர்க்க வேண்டும்' என்றார்கள். பெரிய ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டாள். மறுநாள் நான்கு' ஐந்து டாக்டர்கள் கூடி அவளைப் பரிசோதித்து ''இன்று இரவுக்குள் பிரசவமாகாவிட்டால் நிலைமை மிகவும் மோசமாகிவிடும்'' என்றார்கள். தொலைபேசி மூலம் எனது மனைவி இந்த தகவலைச் சொன்னாள். உடனே அடியேன் ''தெய்வமே துணை-திருமுறைப் பதிகங்கள் உள்ளது, நம்மை நிச்சயம் காப்பாற்றும்'' எனச் சொல்லி இரவு 9 மணிக்கு எங்கள் வீட்டில் பூஜை அறைக்குச் சென்று விளக்கு ஏற்றிவைத்து திருஞானசம்பந்தர் அருளிய ''நன்றுடையானை தீயதில்லானை'' என்ற பதிகத்தையும் திருநாவுக்கரசர் பாடிய ''மட்டுவார் குழலாளோடும்'' என்ற பதிகத்தையும் முழுநம்பிக்கையுடனும், விடா முயற்சியுடனும் பலப் பல தடவைகள், விடிய விடிய காலை வரையிலும் பாடிக்கொண்டிருந்தேன். ''தெய்வமே! ஈஸ்வரா! செட்டி மகளுக்கு மருத்துவம் செய்து சுகப்பிரசவமாக அருளினாயே! எனது மகளையும் காப்பாற்று'' என்று கதறினேன். என்னே ஆச்சரியம்! காலை 6 மணிக்குத் தொலைபேசியில் தகவல் ''சுகப்பிரசவம்'' என்று கிடைத்தது. திருமுறைகளின் தெய்வீகப் பலனுக்கு இதைவிட சான்று தேவையா? பிறகு திருச்சிராப்பள்ளிக்கு என் மகளை அனுப்பித் தாயுமான சுவாமிகளுக்கு அர்ச்சனை செய்வித்தேன்.

இதை என் நண்பர்கள், உறவினர்கள் பலருக்கு சொல்லி அவரவர்கள் இல்லத்திலும் பலரும் நன்மையடைந்தார்கள் என்பதைச் சொல்லி நீங்களும் உண்மை பக்தி, முழுநம்பிக்கையுடன் இந்த 2 பதிகங்களையும் முறையாகப் பாராயணம் செய்

தால் முழுப்பலனுண்டு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருச்சிற்றம்பலம்**

1. திருஞானசம்பந்தர் அருளியது.

திருச்சிராப்பள்ளி
முதல்திருமுறை பண் குறிஞ்சி ஹரிகாம்போதி

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகமுடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே

கைம்மகவேந்திக்கடுவனொடூடிக்கழைபாய்வான்
செம்முகமந்திகருவரையேறுஞ்சிராப்பள்ளி
வெம்முகவேழத்தீருரிபோர்த்தவிகிர்தாநீ
பைம்முகநாகம்மதியுடன்வைத்தல்பழியன்றே.

மந்தம்முழவம்மழலைததும்பவரைநீழல்
செந்தண்புனமுஞ்சுனையுஞ்சூழ்ந்தசிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள்சடைமேலுடையார்விடையூரும்
எந்தம்மடிகளடியார்க்கல்லல்இல்லையே

துறைமல்குசாரற்சுனைமல்குநீலத்திடைவைகிச்
சிறைமல்குவண்டுந்தும்பியும்பாடுஞ்சிராப்பள்ளி
கறைமல்குகண்டன்கனலெரியாடுங்கடவுள்
பிறைமல்குசென்னியுடையவனெங்கள் பெருமானே

கொலைவரையாத கொள்கையர்தங்கண்மதில் மூன்றும்
சிலைவரையாகச்செற்றனரேனுஞ்சிராப்பள்ளித்
தலைவரைநாளுந்தலைவரல்லாமையுரைப்பீர்காள்
நிலவரைநீலமுண்டதும்வெள்ளைநிறமாமே.

வெய்யதண்சாரல்விரிநிறவேங்கைத்தண்போது
செய்யபொன்சேருஞ்சிராப்பள்ளிமேயசெல்வனார்
தையலொர்பாகமகிழ்வர்நஞ்சுண்பர்தலை யோட்டில்
ஐயமுங்கொள்வர்ஆரிவர்செய்கையறிவாரே

வேயுயர்சாரற்கருவிரலூகம்விளையாடும்
சேயுயர்கோயிற்சிராப்பள்ளிமேயசெல்வனார்
பேயுயர்கொள்ளிகைவிளக்காகப்பெருமானார்
தீயுகந்தாடல்திருக்குறிப்பாயிற்றாகாதே

மலைமல்குதோளன்வலிகெடவூன்றிமலரோன்றன்
தலைகலனாகப்பலிதிரிந்துண்பர்பழியோரார்
சொலவலவேதஞ்சொலவலகீதஞ்சொல்லுங்கால்
சிலவலபோலுங்சிராப்பள்ளிச் சேடர்செய்கையே

அரப்பள்ளியானும்அலருறைவானுமறியாமைக்
கரப்பள்ளிநாடிக்கண்டிலரேனுங்கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேயவார்சடைச்செல்வர்மனைதோறும்
இரப்புள்ளீர்உம்மையேதிலர்கண்டாலிகழாரே.

நாணாதுடைநீத்தோர்களுங்அஞ்சிநாட்காலை
ஊணாப்பகலுண்டோதுவோர்களுரைக்குஞ்சொல்
பேணாதுறுசீர்பெறுதும்என்பீரெம்பெருமானார்
சேணார்கோயில்சிராப்பள்ளிசென்றுசேர்மினே

தேனயம்பாடுஞ்சிராப்பள்ளியானைத் திரைசூழ்
கானல் சங்கேறுங் கழுமல வூரிற் கவுணியன்
ஞான சம்பந்தன் நலமிகு பாடலிவை வல்லார்
வான சம்பந்தத்தவ ரொடு மன்னி வாழ்வாரே..11

**திருச்சிற்றம்பலம்**

2. திருநாவுக்கரசு அருளியது

5ம் திருமுறை திருக்குறுந்தொகை
நாதநாமக்கிரியை

மட்டு வார் குழலாளொடு மால்விடை
இட்ட மாவுகந்தேறு மிறை வனார்
கட்டு நீத்தவர்க்கின்னருளே செய்யும்
சிட்டர் போலுஞ்சிராப்பள்ளிச் செல்வரே 1

அரியயன்தலை வெட்டி வட்டாடினார்
அரியயன் தொழுதேத்துமரும் பொருள்
பெரியவன் சிராப்பள்ளியைப் பேணுவார்
அரிஅயன் தொழ அங்கிருப் பார்களே 2

அரிச்சிராப்பகலை வராலாட்டுண்டு
அரிச்சிராது நெஞ்சேயொன்று சொல்லக்கேள்
திரிச்சிராப்பள்ளியென்றலுந் தீவினை
நரிச்சிராது நடக்கு நடக்குமே 3

தாயு மாய் எனக்கே தலைக்கண்ணுமாய்ப்
பேயனேனையு மாண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாய னாரென நம்வினை நாசமே 4

பக்திச் சிரத்தையுடன் பாராயணம் செய்து இறைவனது பூரண அருளுக்குப் பாத்திரமாகுவீர்களாக.

# பாரதப்போரில் பார்த்தசாரதி



**டர்க்டர் த. அமிர்தலிங்கம்**

குருசேத்திர யுத்த களத்தில் பாண்டவர்மற்றும் கௌரவசேனைகள் அணிவகுத்து நின்றிருக்கும் பதினேழாம் நாள் காலை தருமருடைய உள்ளத்தில் ஒரு கவலை தோன்றுகிறது. போர் இன்னும் எத்தனை நாட்கள் நடைபெறுமோ? இப்போரில் தானும் தன் தம்பிகள் நால்வரும் உயிருக்கு ஆபத்தின்றித் தப்பிப் பிழைத்திட முடியுமோ முடியாதோ? என்பதுதான் அவருக்கு உண்டான கவலை. யுத்த களத்தில் உயிர்க்கு அஞ்சிடலாகாது என்பது தருமருக்குத் தெரியும். தருமர் தம்முடைய உயிரைப்பற்றி ஒருபோதும் கவலை கொள்வதே இல்லை. அவருடைய கவலையெல்லாம் தம்முடைய தம்பிகள் நால்வரும் பிழைத்திருக்கவேண்டும் என்பதே. அதனால்தான் கண்ணபெருமானை வணங்கி ''கண்ணா! எங்கள் ஐவரில் ஒருவர் மடிந்தாலும் மற்றவரும் வாழமாட்டோம் என்பதை நீ அறிவாய். எங்கள் ஐவரையும் கைவிட்டுவிடாமல் இறுதிவரை காப்பாற்றுவேன் என்று உறுதி நீ கூறவேண்டும்'' என்று தருமர் கண்ணபெருமானிடம் வேண்டுகிறார்.

அவ்வாறு வேண்டும்போது தருமர், இதுநாள் வரை கண்ணபெருமான் பாண்டவர்களுக்குப் புரிந்த உதவிகளை எல்லாம் தொகுத்துக் கூறியும் பார்த்தசாரதியைப் பலபடப் புகழ்கிறார். பாரதப் போரின் சூத்திரதாரி பார்த்தசாரதியே என்பதைத் தான் நாம் இதுகாறும் இக்கட்டுரைத் தொடர் வாயிலாக வலியுறுத்தி வருகிறோம். இதே கருத்தைத்தான் தருமரும் நமக்குத்தெளிவுறுத்துகிறார். ''கண்ணா! இதுகாறும் நாங்கள் மாளாது வாழ்ந்திருக்கிறோம் என்றால் அதன் காரணம் நீயே. சிறுவயதிலேயே துரியோதனன் கங்கையில் கழுமரங்களை நட்டிவைத்து வீமனை அதில் வீழ்த்தி உயிர் பறிக்க முற்பட்டபோது வண்டுவடிவமாகி அங்கே கழுமரங்கள் தோறும் அமர்ந்து துரியோதனன் சூழ்ச்சியிலிருந்து வீமனைக் காத்தாய். அரசவையில் துரோபதையின் ஆடையைப் பலரும் காணக்களைந்து துரியோதனன் மானபங்கப்படுத்த முற்பட்ட வேளையில், நாங்கள் ஐவரும் அதைத் தடுக்க இயலாமல் பார்த்திருந்தபோதும் நீ தான் துரோபதையின் மானத்தையும் காப்பாற்றினாய். வனவாசம் புரிந்தபோது துரியோதனன் ஏவலின் படி கடும்பசியுடன் சபிக்க வந்த துருவாசரின் சாபத்திலிருந்து எங்களைக் காத்து நீதான் இரட்சித்தாய். எங்கள் அரசுரிமைக்காகத்துரியோதனனிடம் தூது நடந்து போய் கர்ணனின் கவச குண்டலங்களைக் கவர்ந்து பல அரிய செயல்களையும் நீதான் ஆற்றினாய். நமது குமாரன் இராவானைத் துரியோதனன் களப்பலி கொள்ள முயன்றபோது சதுர்த்தசியை அமாவாசையாக்கி இராவானை நமக்கே களப்பலியாக்கிய அற்புதமும் நீதான் புரிந்தாய். பார்த்தனுக்கும் உன் பெருங் கருணையினால் நீ தேரூர்கிறாய். அச்சத்தினாலோ அல்லது பகைவர் பால் கொண்ட அருளினாலோ அர்ச்சுனன் காண்டீபத்தைக் கீழேபோட்டு போர்புரிய மறுத்தபோது அவனுக்கு உபதேசம் புரிந்து நீதான் போர்புரிய ஊக்கத்தையும் உண்டாக்கினாய். சிகண்டி முன் பிறப்பில் வீடுமரைக் கொல்ல பெற்றிருந்த வரம் தவறாதபடி வீடுமரையும் நீதான் கொன்று வீழ்த்தினாய். அருச்சுனனைக் கொல்வதற்காகப் பகதத்தன் வீசிய வேலை திருமார்பில் ஏற்று விசயன் வாழவும், பகதத்தன் வீழவும் நீயே திருவருள் புரிந்தாய். பகைவர் பலரும் வஞ்சமாய் அபிமன்யுவைக் கொன்ற அன்று அர்ச்சுனனும் புத்திரசோகத்தால் மாண்டு போகாமல் காத்து, அவனைக் கயிலைக்கு அழைத்து சென்று சிவபெருமானின் திருவருளையும் நீயே பெற வைத்தாய். வருணன் மகனாகிய சுதாயு அர்ச்சனனை நோக்கி வீசிய கதையை நிராயுதபாணியாகிய நீ உன் திருமார்பில் தாங்கி அதனால் சுதாயு மாண்டு படவும் சூழ்ச்சி புரிந்தாய். உண்மையில் மறையாதபோதும் கதிரவனை உன்கைச் சக்கரத்தால் மறைத்து இருளுண்டாக்கி மறைந்திருந்த சயத்திரதனை வெளிவரச் செய்து அர்ச்சுனனின் சபதம் பொய்யாகாதவாறு அவனை நீயே கொன்று பழி வாங்கவும் செய்தாய்.

அசுவத்தாமா ஏவிய நாராயணாத்திரம் நமது படை முழுவதையுமே கொல்ல முற்பட்டபோதும் நாங்கள் மாண்டிடாவண்ணம் எங்களை நிராயுத பாணியாக்கி நீயே காத்தாய்! இத்தகைய கருணாமூர்த்தியாகிய நீயேமும்மூர்த்தியும் ஆவாய். உன் அற்புதங்களெல்லாம் அறியவல்லார் விண்ணிலும் மண்ணிலும் ஒருவருமே இல்லை. அப்படிப்பட்ட நீதான் எங்கள் ஐவரையும் இந்தப் போரில் இறுதிவரை காத்து அருள்புரிய வேண்டும்'' என்று வேண்டித் தருமர் கண்ணபெருமானின் திருவடிகளில் விழுந்து வணங்குகிறார்.

பாரதப் போரின் சூத்திரதாரியாகிய கண்ண பெருமானும் தருமரை வாரித்தம் தோள்சேர அணைத்துத் ''தருமா! மனம் தளரவேண்டாம்! வெற்றி உன்னுடையதே! இன்றைய போரிலேயே கர்ணன் அர்ச்சுனனால் மடிவான். நாளைய பதி



னெட்டாம் நாள் போரில் வீமனால் துரியோதனனும் மடிவான். கடல்சூழ்ந்த உலகம் முழுதும் இனி நீயே ஆட்சி செய்வாய்'' என்று திருவாய் மலர்கிறார். ''நீர் ஐவரும் எண்ணரும் அமரில் இறக்கலீர், அஞ்சல்'' என்றும் அபயம் அளிக்கிறார்.

''இத்தினம் இரவிச் சிறுவனும்
விசயன் ஏவலினால் இறந்திடும் நாளை
தத்தினப் புரவித்தேர் துரியோதனனும்
சமீரணன் தனயனால் மடியும்
அத்தின புரியும் ஈரிருகடல்சூழ் அவனியும்
நின்னவாம் என்றான்
சித்தின துருவாய் அகண்டமும்
செய்யகட் கருணையந் திருமால்.''

(பதினேழாம் போர்ச்சுருக்கம் 7)

திருமால் இவ்வாறு உறுதி கூற தருமரும் தம் அச்சம் நீங்கி அகம் மகிழ்கிறார். இதே நேரம் கர்ணனும் துரியோதனனிடம் தன் கோரிக்கை ஒன்றை வைத்து அவனை வேண்டுகிறான். 'துரியோதனா! இன்றைய ஒரு தினத்திலேயே நான் பகைவர்களின் தலைகளை எல்லாம் கொய்து தலையற்ற முண்டங்களைக் குதித்தாடும்படி செய்கிறேன். அதற்கு நீ, அர்ச்சுனனுக்குக் கண்ணன் சாரதியாய் இருப்பதைப்போல், மத்திரநாட்டு மன்னன் சல்லியனை எனக்குத் தேரோட்டுமாறு செய்ய வேண்டும். சல்லியன் எனக்கு தேர், செலுத்துவானே யானால் அர்ச்சுனனுக்கு அந்தச் சிவனே வந்து தேர்செலுத்தினாலும் அர்ச்சுனனோடு சிவனையும் நான் கொல்வேன். வீமன் முதலான மற்ற சகோதரர்களையும் நான் ஒவ்வொரு அம்பினாலேயே கொன்று இந்த உலகை நீ ஆள உனக்குக் கொடுப்பேன்'' என்று வீரம் பேசும் கர்ணன் தன் செஞ்சோற்றுக் கடன் உணர்வையும் துரியோதனன் உளம்உருக எடுத்துரைக்கின்றான்.

''ஒருரும் ஒருகுலமும் இல்லா என்னை
உங்கள் குலத்துள்ளோரில் ஒருவன் ஆக்கித்
தேரூரும் அவர்மனைக்கே வளர்ந்த என்னைச்
செம்பொன்முடி சூட்டியம்புராசி
நீரூரும் புவிபாலர் பலரும் போற்ற நின்னினும்
சீர்பெறவைத்தாய் நினைக்கேயன்றி
ஏரூருங் கதிர்முடியாய்உற்றபோரில் யார்க்கினி
என்னுயிர் அளிப்பது இயம்புவாயே''
(பதினேழாம் போர்ச்சருக்கம் 21)

''என்ன ஊர், என்ன குலம் என்று சொல்ல முடியாமல் தேரோட்டி மகனாக வளர்ந்த எனக்குத் துரியோதனா! நீதானே மணிமுடிசூட்டினாய்! அரசர்கள் எல்லாம் போற்ற அரசாளவும் அதனால் நின்னைவிடவும் அதிகமான புகழ்கொள்ளவும் வாய்ப்பளித்தாய்! அப்படிப்பட்ட உனக்கு அல்லாமல் இந்தப் போரில் வேறுயாருக்கு நான் என்னுயிரைக் கொடுக்கப் போகிறேன்'' என்று கர்ணன் துரியோதனனிடம் உளம் நெகிழ்ந்து கூறுகிறான்.


''சிவன் வந்து தேர்விடினும் கொல்வேன்'' என்று சற்றுநேரத்திற்கு முன்புதான் கர்ணன் வீரம் பேசியதையும் கண்டோம். ஆனால் அப்படி வீரம் பேசிய கர்ணனுக்கே எப்படியும்தான் இன்றைய போரில் மடியநேரக்கூடும் என்ற ஐயமும் இருந்திருக்கிறது. அதனால்தான் ''பூமியை உனக்கு ஆக்குவேன்'' என்று சொன்ன அதே வாயால் ''உற்றபோரில் யார்க்கினி என்னுயிர் அளிப்பேன்'' என்பதாகவும் தன் உயிரைத் துரியோதனனுக்குக் கொடுப்பதைப் பற்றியும் அவன் பேசக் காண்கிறோம்.

கர்ணனுடைய வேண்டுகோளுக்கு இணங்கும் துரியோதனனும் சல்லியனைத் தேடிப்போய் தனக்கு ஒருவரம் தரவேண்டுமெனச் சல்லியனிடம் பணிவாக வேண்டுகிறான். துரியோதனா! நீ கேட்பது எதுவானாலும் நான் மறுக்க மாட்டேன். வரம் என ஏன் பணிந்து வேண்டுகிறாய், நீ உத்தரவிட்டு உனக்கு என்னவேண்டுமோ அதைக் கேள்'' எனச் சல்லியனும் ஆர்வமுடன் கூற, துரியோதனனும் மகிழ்ச்சியுடன் ''கண்ணனைப் போல் நீயும் எங்களைக் காக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொள்கிறான். துரியோதனனின் உளக் கருத்தைப் புரிந்து கொள்ளாத சல்லியனும் மனம் மயங்கியவனாய் 'துரியோதனா! உலகை எல்லாம் நீ ஆள்கிறாய். உன் குடைக்கீழ் வாழ்பவனாகியயான் எவ்வாறு உன்னைக் காப்பதற்கு ஆகும்? மேலும் அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகிய அனைத்திற்கும் ஆதிமூர்த்தியாக விளங்கும் கண்ணனுக்கு நானா ஒப்பாவேன்' என்று கேட்கிறான். இதன் பிறகே துரியோதனனும் தன் மனக் கருத்தைத் தெளிவாக எடுத்துக்கூறி அர்ச்சுனனுக்குக் கண்ணன் தேரோட்டுவதைப் போலவே நீயும் கர்ணனுக்குத் தேர் செலுத்தி எங்களைக் காக்க வேண்டும்' என்று வேண்டுகிறான். துரியோதனன் கோரிக்கையைக் கேட்ட சல்லியன் கொதிக்கிறான். 'புல் தின்னும் மானுக்குப் புலியா பணிவிடை செய்யும்? தேரோட்டி மகனாகிய கர்ணனுக்கு மத்திரநாட்டு மன்னனாகிய நானா தேரோட்டுவேன்? துரியோதனா! இந்த வார்த்தையை நீ சொன்னதால் பிழைத்தாய், வேறுயாரேனும் சொல்லியிருந்தால் அவர் நாக்கை நான் அறுத்திருப்பேன். எதிர் நிற்கும் பாண்டவர் சேனையை இருகூறாக்கி நீ மதிக்கும் கர்ணனையும் என்னையும் இன்றைய தினமே இருசேனைப்பகுதிகளையும் நீறாக்கக் கட்டளையிடு. நான் கர்ணனுக்கு முன்பே என் பங்குப் படைகளைக் கொன்றொழித்து, வேண்டுமானால் அவன்பங்குப் படைகளையும் நானே கொன்றொழிக்கிறேன். அப்படி நான் செய்யாமல் போவேனேயானால் அதற்குப் பிறகு கர்ணனுக்கு நான் தேர் ஓட்ட இசைகிறேன்''என்று ஆவேசத்துடன் சல்லியன் மறுத்து கூறத்துரியோதனன் சல்லியனைச் சமாதானப்படுத்துகிறான். ''திருமாலின் திருஉந்திப் பூவில் தோன்றி நான்மறைகளால் உலகைத்தோற்றுவிக்கும் பிரமதேவன் அல்லவா சிவபெருமானுக்குத் தேர்ஓட்டும் சாரதி. திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீமந்நாராயணன் என்று யாவரும் சொல்லுகின்ற கண்ணன் அல்லவா அர்ச்சுனனுக்குச் சாரதி! அவ்வர்ச்சுனனும் அல்லவா உத்தர குமாரனுக்குத் தேரோட்டியாகச் சேவகம் செய்திருக்கிறான். அழகான பூவுலகில் உள்ள எல்லோராலும் மதிக்கத்தக்க மகா பராக்கிரமம் பூண்ட சல்லியரே! தேரூரும் கலை என்ன சாதாரணமானதா? அது எல்லோருக்கும் வருமா? ஆகுமா? உம்மைப் போன்ற சகல கலைகளிலும் வல்லவர்களுக்கு அல்லவா அது சாத்தியமாகும்'. ஆகவே உங்களைப் பெருமையாக மதித்துத்தான்- உங்களுக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை என்பதால்தான் நான் உம்மைக் கர்ணனுக்குச் சாரதியாக வேண்டுகிறேன்'' என்று துரியோதனன் மிக நயமாகச் சல்லியனை வேண்ட சல்லியனும் துரியோதனன் வார்த்தையை மீற விரும்பாமல், கர்ணனுக்கு தேரூர்வதற்கு உடன்படுகிறான். சல்லியன் கர்ணனின் தேர் செலுத்த இசைந்ததும் 'இனி வெற்றி நமக்கே' என்பதாகக் கூறி கௌரவ சேனையும் ஆரவாரம் மிகப் புரிகின்றது. கர்ணனும் சல்லியன் இசைந்தது கண்டு தான் முன்பு இந்திரனுக்கு வழங்கி இழந்த தன்னுடலுடன் ஒட்டிப் பிறந்த கவச குண்டலங்களை மீண்டும் பெற்றதைப் போலப் பெருமகிழ்ச்சி கொண்டு, சல்லியனை இறுகக்கட்டித் தழுவி தன்னுடைய தேர்மேல் ஏற்றுகிறான். அதுகண்ட கௌரவ சேனையும்''வெற்றி நமக்கே'' என்பதாக மகிழ்ந்து ஆரவாரம் புரிகின்றது.

ஆனால் கௌரவசேனையின் இந்த மகிழ்ச்சி நெடுநேரம் நீடிக்கவில்லை. அதற்குக் காரணம் கர்ணனின் தற்புகழ்ச்சிதான். 'பரசுராமர் அளித்த சூரியனுடைய வில்லைப் பெற்றிருக்கிறேன். நாகாஸ்திரம் பெற்றிருக்கிறேன். உன்னையும் தேர்ப் பாகனாகப் பெற்றுவிட்ட எனக்கு இனி நிகரானவர் யாருமில்லை. அந்த அர்ச்சுனனை நான் நொடியில் அழிக்கிறேன் பார்'' என்று கர்ணன் தன் வீரப் பிரதாபத்தை எடுத்து முழக்க, சல்லியனும் அது பொறுக்காமல் 'வாய் வீரம் பேசாதே கர்ணா! தேர்கள் உருண்டு ஒன்றோடொன்று மோதிப் போர்புரியும் போதல்லவா யார் வீரம் வெல்லும் என்பதைக் கூறமுடியும். இதுகாறும் நீ ஆற்றிய எந்தப் போரிலாவது அர்ச்சுனனை வென்றதுண்டா?'' என்று சல்லியன் கர்ணனை அடக்குகிறான். சல்லியன் பாண்டவர்களின் தாய்மாமன், நகுலசகாதேவர்களின் தாய் ஆகிய மாத்திரிதேவியின் சகோதரன். பாண்டவர்க்குப் பிரியமானவன். அவன் துரியோதனன் சூழ்ச்சியால் துரியோதனிடம் உண்ட ஒரு நாள் உணவுக்காக அவனுக்குச் செய்து கொடுத்த சத்தியத்தின் காரணமாக துரியோதனன் அணியில் நின்று பாண்டவர்களுக்கு எதிராகப் போர் புரிந்து கொண்டிருக்கிறான் என்பதை எல்லாம் நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். அப்படிப்பட்ட சல்லியனிடத்திலேயே பார்த்தனின் வீரத்தைக் குறைத்துக் கர்ணன் பேசினால் அவன் எப்படி அதை பொறுத்துக் கொள்வான்? ஆகவே தான் சல்லியன் ''விசயனை ஒருபோதும் நீ செயித்து யாரும் பார்த்ததில்லை'' என்று குத்தலாகக் கூற அதைச் சகிக்காத கர்ணனும் ''சல்லியா! மற்றவர்கள் முன்னால் என்னை இகழ்ந்து பேசாமல் நீ உனக்கிட்ட தேர்செலுத்தும் பணியை மட்டும் பார்'' என்று வெறுப்போடு கூறுகிறான். கர்ணனின் இந்தத் திமிறான வார்த்தைகளைக் கேட்டுச் சல்லியனும் கோபித்து ''எலியின் ஆரவாரம், பூனைக்கு முன் அடங்கிப் போகும். அதைப்போல உன் ஆரவாரம் என்னிடத்தில் ஒன்றும் செல்லாது. என்னையா என் வேலையைப் பார் என்று கூறுகிறாய்? உன்னை அடக்குவதுதான் என் முதல் வேலை. வா! உன் வாய் வீரத்தை நான் அடக்குகிறேன்'' என்றபடி வாளை உருவியவாறு தேரிலிருந்து குதிக்கின்றான். கர்ணனும் தன்வாளை உருவியவாறு களத்தில் குதிக்கின்றான், இதைக் காணும் கௌரவ சேனை திகைத்து மயங்கி நிற்கிறது.

—(தொடரும்)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை—600 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை—600 002




1988 புத்தாண்டு தொடங்கிய அன்று அதிகாலை 12 மணிக்குப் பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி ஆலயத்தில் கற்பூரஜோதி ஏற்றிவைக்கப்பட்டது. இவ்வைபவத்தில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், பழநி ஆலயத்தக்கார் திரு. க. பொன்னுசாமி, பி.எஸ்சி., துணை ஆணையர் திரு. ஆ. மலையாண்டி. பி.ஏ.,பி.எல். ஆகியோர் கலந்து கொண்டனர்.














அறநிலையத்துறையின் சார்பில் ஆலயங்களில் பணியாற்றும் ஓதுவாமூர்த்திகளுக்கு மறுபயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வகுப்புகளைத் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. ஏ. பத்மநாபன், ஐ.ஏ.எஸ். அவர்கள் பார்வையிட்டு தம் கருத்துரையை வழங்கினார்கள். அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திரு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்., ஆணையர் திரு தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ்., இணை ஆணையர் திரு இரா. தண்டபாணி, பி.எஸ்சி.,பி.எல்., துணை ஆணையர் திரு. ந. ச. இராமச்சந்திரன் ஆகியோரும் உடன் உள்ளனர்.

பதிவு எண். எம் 7039